
குணசேகரத்தின்
சிந்தனைகள்

# குணசேகரத்தின் நூல்களின் தொகுப்ப





# என்னுரை

அன்பான எனது இணைய நண்பர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏராளமான நூல்களை வாசித்தேன். பழந்தமிழ் நூல்கள் யாவும் செய்யுள் வடிவிலே இருக்கின்றன. முன்பு என்றால் இவ் அரிய நூல்களைத் தமிழ் ஆசிரியர்கள் தெளிவாகக் கற்று அதை இலகுவான பேச்சுத் தமிழில் தமது மாணவர்களுக்கு உரை சொல்லி வந்தனர். ஆனால் இப்போ அந்த நடைமுறை இல்லை. பழந்தமிழ் நூல்களைக் கற்கும் அளவிற்கு யாருக்கும் மொழியறிவு இல்லை. அதனால் பழந்தமிழ் நூல்கள் தமது பெறுமதியை இழந்து வருகின்றன.

பகவத் கீதையில் கண்ணன், ‘‘தேவையேற்படும் போது நான் பொருத்தமானவர்களைப் பிறப்பிக்கின்றேன்; அக்கிரமங்கள் அதிகரிக்கும் போது அதை அழிக்க நான் பிறப்பெடுக்கிறேன்’’ என்று கூறியுள்ளார். இன்று பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களை எல்லோரும் அறிந்து கொள்வதற்காகக் கண்ணனின் கூற்றுக்கிணங்க நான் அவற்றிற்கெல்லாம் கதை வடிவம் கொடுத்து வருகிறேன். அவை நூல்களாக 1990 இல் வெளிவரத் தொடங்கின. அந்நூல்கள் 25 வருடங்கள் கழிந்தும் மறுபதிப்புக்கள் செய்யப்பட்டு இன்றும் விற்பனையில் உள்ளன. தற்போது உலகத்தில் உள்ள தமிழ் மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக இணையத்தில் எனது நூல்கள் அனைத்தையும் சேர்த்தேன். இணையம் ஆரம்பித்து ஆறு மாதகாலத்துள் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அதை வாசித்துள்ளனர். இது எனக்குக் கிடைத்த இமாலய வெற்றியாகும்.

எனது நூல்கள் சமயம், கல்வி, சமூகம் சார்ந்தவை. பொதுவாகச் சைவசமயத்தில் உள்ள தத்துவங்கள் பலவற்றிற்குக் கதைகள் எழுதியுள்ளேன். அதற்காக ஏராளமான நூல்களை வாசித்தேன். கல்வியில் சாதனைகள் பல செய்துள்ளேன். 2000 ஆம் ஆண்டளவில் கோப்பாய் நாவலர் வித்தியாலத்தில் கற்ற 600 இற்கு மேற்பட்ட மாணவர்களுள் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் ஒருவர் கூட இருக்கவில்லை. அரச பரீட்சைகளில் உச்சமான பெறுபேற்றைப் பெற்றனர். எனது கற்பித்தல் முறைகளைப் பற்றி நூல்களில் விரிவாக எழுதியுள்ளேன். நாவலர் தமிழ் வித்தியாலத்தில்

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் தமது கடமையை நான் அதிபராக இருந்த காலத்தில் செய்தனர். திருமதி ரஞ்சனா தேவி கருணானந்தன் 1.3.2017 இல் ஓய்வு பெறுகிறார். மிகவும் சிறந்த ஆசிரியர் அவர். அர்ப்பணிப்பும், கடமையுணர்வும், மாணவர்கள் மீது அளவு கடந்த அன்பும் கொண்ட அவரின் ஓய்வு கல்வி உலகத்திற்குப் பெரும் இழப்பாகும். அவரது ஓய்வு காலம் சிறக்க வாழ்த்துகிறேன். எதிர்காலச் சந்ததியினர் அறிய வேண்டும் என்பதற்காகவே எழுதினேன். அடுத்துச் சமூகம் சார்ந்த நூல்களில் சமூகத்தில் இன்றுள்ள பிரச்சினைகள் யாவும் எழுதியுள்ளேன்.

முயற்சியும், அர்ப்பணிப்பும் திட்ட மிடலும் சரியாக இருந்தால் இமயமலையையும் தலையில் தூக்கி வைக்கலாம் என்பதைக் கல்வி, சமயம், சமூகம் சார்ந்த நூல்கள் எனக்குப் புலப்படுத்தின.

ஏராளமான நூல்களைக் கற்றதால் ஒழுக்கக் கோட்பாடுகள் பலவற்றை எனது நூல்களில் கூறியுள்ளேன். அவற்றில் ஒரு சிலவற்றைத் தொகுத்து ‘‘குணசேகரத்தின் சிந்தனைகள்’’ என்ற பெயரில் வெளியிடுகிறேன். இதன் இரண்டாம் பாகம் விரைவில் வெளியிடவுள்ளேன். நான் 1968 ஆம் ஆண்டு எழுதத் தொடங்கினேன். 1980 இன் பின் மிகத் தீவிரமாக எழுதினேன். 2009 இன் பின் இன்றுவரை எனது முழு நேரத்தையும் ஒதுக்கிச் செயற்பட்டமையால் சிறு நோய்க்குள்ளாமையால் எழுதி முடித்த சுமார் 25 நூல்களைக் கணனி மயப்படுத்த முடியவில்லை. பிரயாணம் செய்வது, எழுத்துப் பிழைகளைத் திருத்துவது என்பது இயலாதுள்ளது. உடலும் கண்களும் ஒத்துழைக்க மறுக்கின்றன. எனது கல்விச் செயற்பாடுகளுக்கும், எனது எழுத்துத் துறைக்கும் உதவிய நல்நெஞ்சங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இந்நூலுக்கு அட்டைப் படம் வடிவமைத்தும், கணனி மயப்படுத்தியும் தந்த செல்வி. ப.யாழினிக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

கே.வி.குணசேகரம்.

## குணசேகரத்தின் சிந்தனைகள்

1. உயிர்களுக்கெல்லாம் கடவுளே முதலானவர். அரசின் ஆணைப்படி மக்கள் வாழ்கின்றனர். அரசன் இறைவனின் ஆணைப்படி நடக்கிறான். கோழி முந்தியதா? முட்டை முந்தியதா எனச் சில விதண்டா வாதிகள் கேட்கின்றனர். இதில் சந்தேகப்பட எதுவுமில்லை. உலகையும், உலகில் வாழும் உயிர்களையும் இறைவன் படைக்கும் போது சோடி சோடியாகத் தான் படைத்தான். படைப்பு இரகசியமானது.

2. இறைவனின் ஆணைப்படி தான் உலகம் இயங்குகின்றது. ஒருவன் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. நூறு வருடங்கள் தான் சகல வசதிகளோடும் வாழ்வோம் என்று நினைக்கும் கோடீஸ்வரர்கள் பலர் அற்ப வயதில் இறந்து விடுகிறார்கள். நோயாலும், வறுமையாலும் துன்பப்படும் பலர் நூறாண்டு வரை வாழ்கிறார்கள். இது விதியின் விளையாட்டு. விதியை இறைவனே வகுக்கிறான்.

3. இயற்கை அனர்த்தங்கள் திடீரென நிகழ்ந்து ஆயிரக்கணக்கானோரைக் காவு கொள்கிறது. திறமை, அறிவு, நுட்பம், அதிஷ்டம், உயர்வு, தாழ்வு யாவும் இறைவனால் கொடுக்கப்பட்டன.

4. வேதங்கள், உபநிடதங்கள், புராண இதிகாசங்கள், தேவார திருமுறைகளைப் படிக்கலாம், பேசலாமே தவிர அவற்றை ஆய்வு செய்யக் கூடாது. ஏனென்றால் அவை முடிந்த முடிவுகள்.

5. வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நற்செயல்களை ஆயிரம் வருடங்களுக்கு முன்பு செய்தவர்களைப் பற்றி இன்னும் மக்கள் பேசுகிறார்கள், பூசிக்கிறார்கள், வேதவாக்காக எண்ணிப் பின்பற்றுகிறார்கள். அகவே மனிதனாகப் பிறந்தவர்கள் மரணமடையாது இருக்க வேண்டுமானால் நற்செயல்களைச் செய்தல் வேண்டும்.

6. பயன் தரும் மரங்களை நட்டுப் பராமரிக்கும் மக்கள் அவற்றுள் வளரும் களைகளை அகற்றுகிறார்கள். களைகள் இருப்பது நல்ல பயிருக்கு ஆபத்தைக் கொடுக்கும். அது போல மனிதர்கள் தீய செயல்களைச் செய்வோரோடு நட்பு வைத்தல் கூடாது.

7. பலர் அறியாமையால் தான் தவறுகள் பலவற்றைச் செய்கின்றனர். பரீட்சை எழுதும் மாணவன் எழுதி முடிந்ததும் தான் திறமைச் சித்தி பெறுவேன் என்று நினைக்கிறான். ஆனால் அவன் சித்தியடையவில்லை. அதற்குக் காரணம் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடையை அவன் அறியவில்லை. இது போலத் தவறுகள் செய்யும் பலருக்குத் தாம் செய்வது தவறு என்று தெரியாது செய்கின்றனர்.

8. பற்றுக்களின்றி இறைவனைத் தொழுகின்றவர்கள் இறைவனோடு சேர்ந்தவராவர். அவர்களுக்குத் துன்பமும், இன்பமும் சமமானவை. துன்பப்படும் போது அத்துன்பத்தை இறைவன் நீக்குவான் என்றிருப்பார்கள். இன்பம் வரும் போது அதைத் தந்தவன் இறைவன் என்று மகிழ்வார்கள்.

9. கடவுளுக்கு எதற்குப் பொருள், உலகைப் படைத்து, உயிர்களைப் படைத்து உணவளித்துக் காக்கின்ற கடவுளுக்குத் தனக்குத் தேவையான பொருட்களைப் படைத்துத் தான் எடுத்துக் கொள்ள முடியாதா..? வசதியானவர்கள் தான தர்மம் செய்ய வேண்டும். தான தர்மங்கள் தான் ஒருவனை ஏழேழு பிறவிகளிலும் வாழ வைக்கும். தானதர்மம் செய்யாதவன் பாவியாகப் பிறந்து தான தர்மங்களை ஏற்று வாழ்கிறான். அப்படியான பாவிகளுக்கு தானதர்மம் செய்பவன் இறைவனாக இருத்தல் வேண்டும். கோவில்களில் மண்டபங்கள் கட்டுவது இயற்கையின் சீற்றத்தால் துன்புறும் போது மக்கள் அங்கு வந்து தங்குவதற்காகவே.

10. சமயம் மனிதனுக்கு ஒழுக்கத்தைப் போதித்து அவனைப் பூமியில் நல்ல படி வாழ வழி வகுக்கிறது. பழி பாவங்களைச் செய்யவிடாது தடுக்கிறது. அநியாயம் செய்வோரைத் தடுக்கிறது. நீதி நியாயங்களை எடுத்துச் சொல்கிறது. வாழ்க்கையை நல்ல படி வாழ வழி வகைகளைச் சொல்லிக் கொடுக்கிறது. பெரியோரை மதிக்கக் கற்றுக் கொடுக்கிறது. சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக் காட்டுகிறது. இதுதான் சமயம். இதைவிட்டுப் பூசைகளும், வழிபாடுகளும் தான் சமயம் என்று எண்ணக்கூடாது.

11. "அடுத்தவனைக் கெடுக்க நினைப்பவன் தன்னைத் தானே கெடுத்துக்கொள்கிறான். அடுத்தவனுக்கு உதவுவதன் மூலம் தனக்கு உதவிகளைத் தேடிக்கொள்கிறான்."

12. "கற்றவர்கள் கூறுவதெல்லாம் சரியானவை அல்ல. கற்றவர்கள் பலர் அடுத்தவர்களைக் கெடுப்பதற்காகப் பலவற்றைச் செய்கிறார்கள். இல்லாவிட்டால் தான் மேதாவி என்பதைக் காட்டச் செய்கிறார்கள். எவற்றையும் ஆராய்ந்து அறிந்த பின்பு முடிவெடுங்கள்."

13. "உயிர்கள் ஒருபோதும் அழிவதில்லை. அவை இரண்டு நிலைக்கு உட்படுகின்றன. ஒன்று மீண்டும் பிறக்காத நிலை. இரண்டாவது மீண்டும் மீண்டும் பிறக்கும் நிலை. நல்லவற்றைச் செய்பவன் பிறவாத நிலைக்கு ஆட்படுகிறான். தீமைகள் செய்பவன் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்துத் துன்பப்படுகிறான். செயல்கள் மட்டும்தான் பாவபுண்ணியங்களை உண்டாக்குவன அல்ல. நினைவுகளும்

உண்டாக்கும். எனவே புண்ணியம் செய்ய நினைப்போர் நினைவுகளாலும் புனிதர்களாக இருத்தல் வேண்டும்."

14. "நம்பிக்கைதான் வெற்றிக்கும், இன்பத்திற்கும் அடிப்படையானது. ஒன்றில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் வெற்றி தானாக வரும். அது கடவுள் நம்பிக்கையாக இருந்தால் எப்படிப்பட்ட கஷ்டமான செயலானாலும் வெற்றியைத் தேடித் தரும்."

15. "எல்லாத் துன்பங்களுக்கும் விதிதான் காரணம் என்று நீ நம்பாதே. விதியை மதியால் வென்ற வரலாற்றை நாம் இதிகாச புராணங்களில் காண்கிறோம். நல்லவற்றைச் சிந்தித்து நல்லவற்றைச் செயற்படுத்த விரும்புவோர்க்கு விதி துணைபுரியும். கெட்டவற்றைச் சிந்தித்து கெட்டவற்றைச் செய்வோர்க்கு விதி யமனாக மாறும்."

16. "இறைவனை வழிபடுங்கள். உங்கள் துன்பதுயரங்கள் மட்டுமல்ல, இறைவன் உங்களுக்களித்த இன்பங்களையும் எடுத்துச் சொல்லுங்கள். துன்பமான வேளையில் நாம் முன்பு அனுபவித்த இன்பங்களை நினைப்பதன் மூலம் துன்பத்தின் சுமைகளைக் குறைக்கலாம். துன்பங்களைக் குறைக்க நம்பிக்கையே முக்கியம். அது கடவுள் நம்பிக்கையாக இருந்தால் துன்பங்கள் யாவும் பஞ்சாய்ப் பறந்துவிடும்."

17. "ஒவ்வொருவரும் தத்தமக்குத் தாமே துன்பங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். துன்பங்கள் ஒருவனது செயல்களாலே உண்டாகின்றன. அதை மற்றையோரால் நீக்கமுடியாது. நீ ஏற்படுத்திய துன்பத்தை நீயே நீக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தத் துன்பம் உன்வாழ்வைக் கெடுத்துவிடும். ஒருவன் தனது பொறுப்புக்களைத் தன் தோள்மீது சுமப்பானானால் பொறுப்புக்கள் இலகுவில் தீர்ந்துவிடும். உனது விதியை வேறுயாரும் படைக்கமுடியாது. உன்னுள் இறைவனால் படைக்கப்பட்ட, உனக்குத் தேவையான எல்லாச் சக்திகளையும் நீ பயன்படுத்தினால் உனது வாழ்வு பிரகாசமாகும் என்பதை என்றும் நினைவில் வைத்திரு. தெரியாதவற்றைத் தேடிக் கல். இல்லாதவற்றை உழைத்துப் பெறு. உன்வாழ்வு சொர்க்கமாகும். சொர்க்கம் ஒவ்வொருவருக்கும் மிக அருகிலேயே உள்ளது. நற்செயல்கள் மூலம் நீ அங்கு செல்லலாம்."

18. "மக்கள் அறியாமையால் தமது வாழ்க்கையில் உள்ள குறைபாடுகளை மற்றவர்கள் மீது சுமத்தி ஆறுதலடைகிறார்கள். இல்லாவிட்டால் தெய்வத்தின் மீது சுமத்துகிறார்கள். இல்லாவிட்டால் விதி, தலையெழுத்து என்று என்றுமே காணாத ஒன்றின்மீது பழியைச் சுமத்துகிறார்கள். இவையெல்லாம் சரியானவை அல்ல.

உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ நடந்துகொண்டால் குற்றங்களை நீ உன்மீதே காண்பாய். உன் மனம்தான் யாவற்றிற்கும் காரணம். உன்னை ஆன்மீகவாதியாக்குவதும், தனவந்தனாக்குவதும், கல்வியாளனாக மாற்றுவதும் உனது மனம் என்பதை நீ ஒப்புக்கொண்டால் நீ பிறந்ததன் பயனை நன்கு அனுபவிப்பாய்."

19. "நீ மற்றையோர்க்கு உதவி செய்வதாக நினைத்துச் செய்யாதே. மாறாக அவருக்குச் சேவை செய். உதவியென்று செய்தால் பின் நீ அதை எதிர்பார்ப்பாய். சேவை செய்தால் எதிர்பார்ப்பு இராது. கடவுளால் படைக்கப்பட்ட ஆத்மாக்களுக்குத் தொண்டுசெய். அத்தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாக மாறும். சந்தர்ப்பங்கள் உன்னைத் தேடிவரும்போது நல்லவற்றை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால் அதைச் செய்துமுடி. நல்ல சந்தர்ப்பங்களை ஆண்டவன் உனக்குக் கொடுப்பதன் மூலம் நீ பாக்கியசாலியாவாய். கெட்டதை விலக்கிவை. கெட்டவற்றைச் செய்வதன்மூலம் நீ பாவியாவாய். உன்னை நீ உயர்த்திக் கொள்ளவும், உன்னை நீ தாழ்த்திக் கொள்ளவும் உனது செயல்களே முன்நிற்கின்றன என்பதை நீ உணரல் வேண்டும்."

20. பணம் என்பது இன்று வரும் நாளை போய்விடும். சமூகத்தில் ஓகோ என்று இருந்த பலர் பிச்சையும் எடுக்கலாம், பிச்சைை எடுத்தவன் கோடீஸ்வரனாகவும் மாறலாம். ஆனால் நல்ல குணமுடையவர்கள் ஒரு போதும் கெட்டுப்போவதில்லை. அவர்கள் மீது மக்களுக்கு அன்பும், மதிப்பும், மரியாதையும் நம்பிக்கையும் இருக்கும். விதிவசத்தால் அவர்கள் துன்பத்திற் காட்பட்டால் அவர்களுக்கு உதவப் பலர் முன் வருவார்கள்.

21. தன்னில் முழுமையான நம்பிக்கை வைப்பவன் தான் எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவான். நம்பிக்கை, பொறுமை, விடாமுயற்சி என்பன வெற்றியின் படிகள். முதலில் தன்னை நம்ப வேண்டும். அடுத்ததாகத் தோல்விகள் வந்தாலும் தளராது நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். இச்செயன்முறை வெற்றியை அழைத்து வரும்.

22. நினைப்பதை உயர்வாக நினைத்தல் வேண்டும். நினைப்பதைச் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவன் நினைத்ததையே எவ்வேளையிலும் நினைத்திருப்பதால் அவன் அதுவாகிறான். அதனால் அவன் வலிமையுடையவனாகிறான். மனவலிமை எதையும் செய்ய வைக்கும்.

23. யாரிடமும் எதையும் எதிர்பாராது வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். நீ மேலானவனாக வந்துவிட்டால் சிறு உதவிகள்

செய்தவனும் உனது உயற்சி தன்னால் தான் உண்டானது என்று சொல்வான். உனது முயற்சிகள் மட்டும் தான் உன்னால் உயர்த்தும்.

24. இல்லை, முடியாது, இயலாது என்று நினைப்பவன் ஒரு போதும் உயர்வடைய மாட்டான். என்னால் எதையும் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செயற்பட்டுப் பார். பெரிய பெரிய விடயங்களையெல்லாம் தூசு போல ஊதித்தள்ளி விடுவாய். அதன் பின்பு தான் உனது ஆற்றல் உனக்குப் புரியும்.

25. பலவீனத்திற்குப் பரிகாரம் தன்நம்பிக்கையை வளர்ப்பதே. தன்நம்பிக்கை முயற்சிகளால் உண்டாகும் முயற்சியில் வெற்றி பெற்றவர்களின் வரலாற்றை ஆராய்ந்தால் அவர்களின் முயற்சியின் வலிமையைத் தெரிந்து கொள்ளலாம்.

26. பழிக்கு அஞ்சு, பாவத்திற்கு அஞ்சு, நீதியற்ற செயல்களைச் செய்வதற்கு அஞ்சு. மற்ற எதற்கும் அஞ்சாதே. அஞ்சுபவன் பலவீனன். அஞ்சாதவன் வலிமையானவன். பலவீனன் அடிக்கடி மரணமடைந்து பிறக்கிறான்.

27. நம்பிக்கை உள்ளவனின் மனதில் கடவுள் குடியிருந்து அவனை வழிநடத்துகிறார். நம்பிக்கையற்றவனின் மனதில் இருக்கும் கடவுள் அவனைக் கவனிக்கிறார். அவர் அவ்வப்போது சரியான வழிகாட்டினாலும் அவன் அதைக் கவனிக்காது நிராகரிக்கிறான்.

28. வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் மிகவும் வறுமைப்பட்டவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் தமது நம்பிக்கையால் வறுமையைப் போக்கிக் கோடீஸ்வரராகியுள்ளனர். கல்வியறிவில்லாத பலர் அறிஞர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள். இவற்றிற்குக் காரணம் அவர்கள் தம்மில் கொண்டிருந்த நம்பிக்கை. அதனால் வந்த முயற்சி.

29. சமூகத்தைப் பார். நீயே ஒரு கூலிக்காரனை வேலைக்கு அமர்த்தும் போது நன்றாக வேலை செய்பவன் என்று அறியப்பட்டவனையே வேலைக்கு அமர்த்துவாய். வலிமை தான் சிறந்த வாழ்வை உனக்குக் கொடுக்கும். பலவீனர்களால் ஒரு போதும் முன்னேற முடியாது. அவர்கள் அன்றன்று கிடைத்தவற்றை உண்டு வாழ்க்கையைக் கழிக்கின்றனர்.

30. நிறைந்த மனவலிமையையும், விடாமுயற்சியும் உடையவன் தன்னை மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைத்துத் தான் தலைவனாகி விடுவான். ஆற்றலும், மனஉறுதியும், கடுமையான உழைப்பும் ஒவ்வொருவரினதும் குறிக்கோளை நிறைவேற்றும்.

31. முதலில் அறியாமையில் இருந்து மனிதர்கள் மீள வேண்டும். அறியாமையால் தான் மேதாவி என்று தம்மைத் தாம் எண்ணும் கல்வி மான்கள் பலர் தோல்வியடைந்திருக்கிறார்கள். ஆற்றலும், மனஉறுதியும், விடாமுயற்சியும், தன்நம்பிக்கையும் கொண்டவர்கள் தான் முழு உலகையும் தமது பயன் மிக்க பணிகளால் மகிழ்விக்கின்றார்கள்.

32. ஒவ்வொருவரும் தான் செய்யும் செயலை அர்ப்பணிப்புடன் தனது சொந்தச் செயலென எண்ணிச் செய்தல் வேண்டும். அவ்வேளையில் தனது ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்யும் போது ஆற்றல் படிப்படியாக வளர்ந்து உச்ச நிலையை அடையும். அதனால் செய்யும் செயலைச் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும். இவ்வாறு செயற்பட்டால் ஒரு கூலித் தொழிலாளியும் மேலதிகாரியாகலாம்.

33. மனதை அடக்குவது தான் ஆற்றல். ஆற்றலுடையவன் தான் சாதிக்க நினைத்தவற்றைச் சாதித்துக் காட்டுவான். மனதின் ஒரு முகப்படப்பட ஆற்றல் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படும். இதை மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள மனிதனோடும் மிகவும் உயர்ந்த நிலைக்கு வந்த மனிதனோடும் ஒப்பிட்டுப் பார்த்தால் அது தெரியவரும்.

34. சகல ஆற்றல்களையும் உடையவனாகவே இறைவன் மனிதனைப் படைத்தான். ஆனால் பெரும்பான்மையான மனிதர்கள் தமது ஆற்றலை நினைத்துப் பார்ப்பதில்லை. அதனால் அவ்வாற்றல் வீணாகிறது. அதனால் தான் அவன் முன்னேற முடியாது பிறரைக் குறை கூறித் திருப்திப்படுகிறான்.

35. ஆற்றல் இல்லாதவர்கள் தாமும் முன்னேற மாட்டார்கள். பிறருக்கும் உதவி செய்யமாட்டார்கள். குடும்பத்தவர்கள் கூட அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது. மன உறுதியும், வலிமையும், விடாமுயற்சியும் ஆற்றலை வளர்ப்பவை. அதனால் முன்னேற விரும்புபவர்கள் தமது ஆற்றலை வளர்க்க வேண்டும்.

36. ஆற்றல் உடையவர்கள் தாம் விரும்பிய செயல்களுக்கு வடிவம் கொடுப்பார்கள். அவர்கள் தமது செயல்களை முன்கூட்டியே திட்டமிட்டுச் சரியான வழியில் செயற்படுவதால் அவர்களின் செயல்களுக்குப் பின்னால் அவர்களது அத்மாவின் பெருஞ்சக்தி செயற்படும். அத்துடன் அவர்களது மனம், இதயம், ஆன்மா அத்தனையும் அச் செயற்பாட்டில் இணைந்திருக்கும்.

37. மனம் தான் உயிர்களுக்குத் தீர்மானத்தை எடுத்துக் கொடுக்கிறது. அதன் முடிவைத் தான் உயிர்கள் தம் முடிவாகக் கொள்கின்றன. மனம் தான் உயிர்களின்

நடத்தையையும் தீர்மானிக்கிறது. எனவே மனதைப் புரிந்து கொள்பவனிடம் மனதின் திட்டங்கள் தோற்றுப் போகின்றன.

## கல்வி பற்றிய சிந்தனைகள்

38. பிள்ளையின் மனதில் உள்ளவற்றை வெளிப்படுத்த வைப்பதே கல்வி. கற்றவற்றைச் சொல்லிக் கொடுத்து அதைத் திரும்பத் திரும்பக் கூறுவதல்ல கல்வி. மனதில் பதிய வைத்துப் பொருத்தமான இடத்தில் வெளிப்படுத்தத் தயார்ப்படுத்தலே கல்வி.

39. விளக்கமில்லாது மனனஞ் செய்தல், தேவையில்லாதவற்றைக் கற்றல், உண்மையான பொருளை விளங்காமை. விளங்காது விவாதம் செய்தல், பெரியோரை அவமதித்தல் என்பன அறிவிற்கு விரோதமானவை.

40. பல்வேறு வகையான நூல்களைக் கற்பதல்ல அறிவு. சில நூல்களைக் கற்றாலும் அவற்றை விளங்கிக் கற்க வேண்டும். கற்றபடி வாழ வேண்டும். இது தான் கல்வியின் பயனாகும்.

41. விஞ்ஞானிகள் பல புதிய விடயங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். அவை யாவும் அவர்களைத் தேடி வரவில்லை. மாறாக அவர்கள் ஊன் உறக்கமின்றித் தாம் செய்ய நினைத்ததை அல்லும் பகலும் ஆய்வு செய்தே கண்டுபிடித்தனர். உறுதியான மனமும், செயலில் ஆர்வமும், விடாமுயற்சியும் கொண்டு அவர்கள் உழைத்தமையால் இன்று உலகம் பயன் பெறுகிறது.

42. ஒரு காலத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்த எமது கல்வி இன்று மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்து விட்டது. அதற்குக் காரணங்கள் சொல்வதும், புள்ளி விபரங்களைக் கூறுவதும், போராடுவதும், கூச்சலிடவதும் கல்வியை மேம்படுத்தாது. இழந்த கல்வியைப் பெற கடுமையாக உழைத்தல் வேண்டும். பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் உண்மை நிலையைக் கூறுதல் வேண்டும். கல்விமான்கள் இழந்த கல்வியை எவ்வாறு மேம்படுத்துவது என்று சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். ஆசிரியர்கள் வேறு வேலைகளை விட்டு விட்டு அர்ப்பணிப்புடன் செயற்படல் வேண்டும்.

43. கல்வி உயர்ந்த ஒழுக்கத்தை உருவாக்குதல் வேண்டும். மனவலிமையை உண்டாக்குதல் வேண்டும். அறிவை விருத்தி செய்தல் வேண்டும். மாணவர்கள் தமது அறிவின்

மூலம் தனக்கும் தனது குடும்பத்திற்கும், நாட்டிற்கும் பயன் தரும் விடயங்களை அறிந்து கொள்ளல் வேண்டும்.

44. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய கல்வி முறையை நினைவில் கொண்டால், அது மாணவர்களை மட்டுமல்ல பெற்றோரையும் வழிநடத்தியது, சமூகத்தையும் வழிநடத்தியது. ஆசிரியர்கள் தெய்வமாக மதிக்கப்பட்டனர். இன்று ஆசிரியர்களும், மாணவர்களும் மதுச்சாலைகளில் சந்தித்துக் கொள்கின்றனர். இந்த நிலை முற்றாக மாற்றப்படல் வேண்டும். ஒழுக்கம் மாணவர்களுக்கு என்றே சமூகம் நம்புகிறது. அது பிழை ஒழுக்கத்தை முதலில் ஆசிரியர்கள் பேண வேண்டும், பெற்றோர் பேண வேண்டும். அதனால் மாணவன் பேண வேண்டிய நிலை தானாகவே உருவாகும்.

45. இயங்கும் உயிர்களில் எல்லாம் இறைவன் இருக்கிறார். இயங்கும் சக்தி அதாவது இயங்கும் சக்தி தான் இறைவன். இது பலருக்குத் தெரிவதில்லை. உலகை இயக்குபவன் இறைவன். உயிர்களை இயக்குபவன் ஆசிரியன்.

46. அறிவு ஒவ்வொரு உயிருக்குள்ளும் உள்ளது. அதை வெளிப்படுத்துவது ஆசிரியரின் கடன். நல்ல ஆசிரியர்கள் தம்மை விடச் சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும். ஆரம்பக் கல்வியை நல்லபடி பெறும் மாணவனுக்கு உயர் கல்வி பெறுவது பெரும் சுமையாக இராது. ஒரு முறை தான் கேட்டதையும், அறிந்ததையும் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்பவனுக்கு ஆசிரியரின் உதவி தேவைப்படுவதில்லை.

47. ஆசிரியரது நடத்தை தான் மாணவர்களுக்கு வழிகாட்டியாகிறது. ஆசிரியர்கள் நல்ல ஒழுக்க சீலர்களாகவும், சிறந்த கல்விமான்களாகவும் இருந்தால் அவரது வாழ்க்கை மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமையும்.

48. ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தான் மாணவர்களை உருவாக்க வேண்டும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒழுக்கம் மாறக்கூடாது. எந்தச் சமூகம் ஒழுக்கத்தை மீறாதிருக்கின்றதோ அந்தச் சமூகம் தான் உயர்ந்த சமூகமாகும். சமூகம் ஒழுக்கமுடையதாக இல்லாவிட்டால், சமூகத்தை ஒழுக்கமுடையதாகச் செய்ய வேண்டுமே தவிரத் தான் அச் சமூகத்திற்கு ஏற்றவாறு மாறக்கூடாது.

49. மாணவரின் கல்வி வளர்ச்சியானது, மாணவனுக்குக் கல்வியில் விருப்பை உண்டாக்குவதில் தான் தங்கியுள்ளது. விருப்பை உண்டாக்குவது பெற்றோரினதும், ஆசிரியரினதும் தலையாய கடமையாகும். மாணவன் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை ஆசிரியர்களோடு கழிப்பதால் ஆசிரியர்கள்

நடை, உடை, பாவனைகளில் மிகுந்த கவனமெடுத்தல் வேண்டும்.

50. மாணவர்களுக்குக் கற்பதில் உள்ள தடைகளை நீக்கி, அவர்களை மேம்படுத்துவது ஆசிரியர்களின் பணியாகும். ஆதலால் ஆசிரியர்கள் தமது விருப்பு வெறுப்புக்களைத் தியாகம் செய்யத் தயங்கக் கூடாது.

51. ஓர் ஆசிரியன் பெருமையடைய வேண்டுமானால் அவன் நல்ல மாணவர்களை உருவாக்குதல் வேண்டும். நல்லதொரு ஆசிரியனால் தான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆசிரியர்கள் நன்மை தரக்கூடியவற்றையே மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். அத்துடன் கற்பிக்கும் விடயங்களில் சந்தேகம் இருக்கக் கூடாது. அறிவு மேம்பட்ட மாணவர்களை இன்னும் மேம்படச் செய்ய வேண்டும். சராசரியான மாணவர்களின் அறிவு மட்டத்தை உயர்த்தல் வேண்டும். குறைந்த அறிவுள்ள மாணவர்களின் அறிவின் அளவை அறிந்து அதற்கேற்றபடி கற்பித்தல் வேண்டும்.

52. ஆசிரியனது இலட்சியம் கற்பித்தல் என்றால் கற்பிப்பவனாகவே நீ மாறிவிடுவாய். கல்வியை ஊட்டுவது தான் ஆசிரியர்களது இலட்சியம். அது மாணவனை வளர்ப்பதோடு உன்னையும் வளரச் செய்யும். பெயர், புகழ், பதவி என்பவற்றை உனக்குப் பெற்றுத் தரும். அதனால் உனக்குப் பல செல்வங்கள் தானாகவே வந்து சேரும்.

53. ஆசிரியர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவே என்று எண்ணுதல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியர்களும் எந்தத் துன்பம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு செயலாற்ற வேண்டும். தினமும் கடமைகள் செய்வது போலப் புதுப் புது விடயங்களை அறிந்து மாணவர்களுக்கு அதைக் கூறுதல் வேண்டும். மாணவனோடு சேர்ந்து கற்கும் ஆசிரியன் தான் மாணவனை வளப்படுத்துவான். தானும் வளமானவன். அதனால் ஆசிரியர்கள் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருத்தல் வேண்டும்.

54. ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். பரிபூரணமான அன்பு, தவறு செய்யும் பிள்ளைகளைக் கண்டிக்காது அன்புடன் நல்லவற்றை எடுத்துரைத்தல், தீங்கு செய்யாத தன்மை, கோபம் கொள்ளாத இதயம் ஆகியவை தான் ஆசிரியத்துவத்தை மகிமைப்படுத்துவன. ஆசிரியர்களிடம் சிறந்த ஒழுக்கம் இல்லாவிட்டால் அவரிடம் மாணவ சமுதாயம் நம்பிக்கை கொள்ளாது. ஆசிரியர் ஒழுக்கமுள்ளவராக இருக்கும் போது சமூகம் அவர் மீது உறுதியான நம்பிக்கையும் பற்றும் வைக்கும்.

55. ஆசிரியர்கள் சட்டதிட்டங்களுக்கும், சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுகடகும் உட்பட்டு நடக்க வேண்டும் என்ற பயத்தால் தனது கடமைகளைச் செய்யக் கூடாது. ஆசிரியன் என்பவன் மாணவனின் பெற்றோரை விட உயர்ந்தவனாகவும், கடவுளை விடக் காருண்ணியம் மிக்கவனாகவும் இருத்தல் வே5ண்டும். ஆ என்பது பசு. கடவுள் ஆன்மா என்ற பதத்தைக் குறிக்கும். சிரியன் என்பது மேம்படுத்துபவன் என்ற கருத்துடையது. ஆசிரியன் என்பவன் ஆன்மாவை மேம்படுத்துபவன். அதனால் தான் ஆசிரியனைக் குரு என்கிறார்கள். சைவ சமயத்தில் சிவனின் திருவருள் தான் குருவாக வந்து ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தி ஆட் கொள்கிறது.

56. கல்வி என்பது வளர்ச்சியின் கருவி. கல்வியால் மனிதன் மாறாமல் ஒரு நிலையிலேயே எப்போதும் நிரந்தரமாக இருந்தால், அது குழந்தை என்றென்றும் குழந்தையாகவே இருப்பதை ஒக்கும். கல்வியால் ஒருவன் பரிபூரண நிலையை அடைய வேண்டுமானால், முதலில் அவனின் ஆன்மா கல்விச் சிந்தனைகளால் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அதன் பின் கற்றபடி வாழுதல் வேண்டும்.

57. மாணவனின் உயர்வு ஆசிரியர்களின் வாண்மை விருத்தியிலேயே தங்கியுள்ளது. மற்றவர்கள் படிக்கிறார்கள் என்றும், பதவி உயர்வுகளுக்காகவும் மேற்படிப்பைப் படிக்கக் கூடாது. கத்தியைக் கூர்மையாக்கத் தீட்டுவது போல மறந்தவற்றை நினைவுபடுத்தவே தினமும் கற்றல் வேண்டும்.

58. வாண்மையை விருத்தி செய்தல் என்பது முன்னேறிச் செல் என்றில்லை. மாணவனது தேவைகளைப் பூர்த்தி செய் என்று சொல்கிறேன். இன்று நவீன கருவிகள் மூலம் கற்பித்தல் நடைபெறுகிறது. அவற்றை மாணவன் அறிந்து வைத்துள்ளான். அதனால் அவனுக்கு உதவ நீ அவனிலும் பார்க்க முன்னேறிச் செல் என்கிறேன்.

59. சூழ்நிலைக்கேற்பக் கற்பிப்பதை மாற்றியமைப்பதே வெற்றிகரமான கற்பித்தல் முறையாகும். இம் முறைதான் மாணவனைக் கவரும், மனதில் பதிய வைக்கும். இம்முறை தான் மாணவனுக்கு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். மாணவன் இயங்கிக் கொண்டிருப்பதால் கற்பித்தல் முறைகளும் மாறத்தான் வேண்டும்.

60. அன்புள்ளம் கொண்ட ஆசிரியர்களை மாணவர்கள் ஆராதிப்பார்கள். பொறுமையான ஆசிரியர்களைப் போற்றுவார்கள். ஒழுக்கமுள்ள ஆசிரியர்களைச் சமுதாயம் போற்றிப் புகழும். அதனால் ஆசிரியர்கள் அன்பு, பொறுமை, ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ வேண்டும். அன்புள்ளம் இருப்பவனுக்கு மற்றவையெல்லாம் தேடி வந்து சேரும்.

61. பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் தான் கற்பிக்க வேண்டும் என்று எண்ணாதே. மிக மிகத் தாழ்ந்த பாடசாலைக்குச்

சென்று அர்ப்பணிப்புடன் சேவை செய். அதனால் அது பிரசித்தி பெற்ற பாடசாலையாக மாறும். அது உன்னால் நடைபெற்றது என்ற நற்பெயர் உண்டாகும். அது அப்பாடசாலை இயங்கும் காலம் வரை நிலைத்திருந்து உனது பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கும். இதை நான் செய்துள்ளேன்.

62. பணம் பொருளால் அல்ல அர்ப்பணிப்பாலேயே கல்வி வளர்கிறது. கற்கப் புத்தகமோ விளக்கோ இல்லாதவர்கள் பெருங்கல்விமான்களாகியுள்ளனர். இவற்றைக் கேள்விப்பட்ட பின்பும் பலர் பண பலமுடையவர்கள் தான் கல்விமான்களாக முடியும் என்று நம்புகின்றனர்.

63. கல்வி என்பது புதிதாக ஒரு பொருளை அறிமுகப்படுத்துவதல்ல. மனிதனிடமுள்ள ஞானத்தை வெளிப்படச் செய்வது.

**பின் வருவன சமூகம் சார்ந்த நூல்களில் என்னால் எழுதப் பெற்றவை.**

64. கடவுளை அடைந்தவர்கள் என்று சமய நூல்களால் கூறப்பட்ட அனைவரும் மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றியவர்கள். அத்துடன் பிறரின் மீது அளவற்ற அன்பு கொண்டவர்கள்.

65. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் சுத்தமாக இருந்தால் தான் சேவை செய்ய முடியும். சேவையில் பாகுபாடு, உயர்வு தாழ்வு பொருளாசை என்பன உடையோர் சேவை செய்வதென்பது பொருள்தேடும் முயற்சியாகும்.

66. ஒரு செயலின் பயனில் தான் அதிகமானோர் கவனம் செலுத்துகின்றனர். அதிலிருந்து வரும் இலாபத்தைக் கணக்கிட்டு மனக்கோட்டை கட்டுகின்றனர். ஒரு செயலின் பயனில் அக்கறை கொள்வதால் பயன் எதுவும் ஏற்படாது. அதை விடுத்து செயலை நல்லபடி செய்யும் முறைகளை அறிந்து விடாமுயற்சியுடன் ஈடுபடுத்தலில் கவனம் கொள்வதே செயலின் வெற்றிக்குக் காரணமாக அமையும்.

67. நீ பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் உனக்கு நீயே நன்மை செய்கிறாய் என்பதைத் தெரிந்து கொள். உன்னிடமிருந்து உதவியைப் பெறும் பலர் உனது அன்புக்குப் பாத்திரமாவார்கள். உன்மீது விருப்பம் கொள்பவர்கள் ஆவார்கள். அதன் மூலம் நீ பல நன்மைகளை அடையலாம். சேவையின் மூலம் தூய்மையையும், பரிபூரணத் தன்மையையும் அடைபவனே பாக்கியசாலியாவான்.

68. அன்போடும், மகிழ்வோடும், நடுவு நிலையில் இருந்து வழுவாமலும், கனிவுடனும் நல்ல பணிகளைச் செய்வோரே கடவுளால் விரும்பப்படுவார்கள். அவர்களுக்குக் கடவுள் துன்பங்களை வரவிடார். இத்தகையவன் செய்யும் சேவைகளால் பரிபூரணமடைவான். அச்சேவை அவனுடன் எப்போதும் கூடச் சென்று அவனுக்குத் துன்பங்கள் நேராதபடி காப்பாற்றும்.

69. ஒரு பெரிய செயலைச் செய்து முடிக்க நீண்டகாலம் தேவைப்படும். செயல் முடிந்த பின்பும் அது பயன் தரநாளாகலாம். செயல்கள் யாவும் வெற்றியில் முடிவடைவதில்லை. பெரும் பணத்தைச் செலவு செய்தும் சிலரது முயற்சி தோல்வியில் முடிவடையலாம். தோல்வி என்பது வெற்றிக்கான படிக்கல் என நினைத்து இடையறாது முயற்சிப்பவன் தான் வெற்றியடைகிறான். வெற்றிப் பாதையில் பல தடைகள், வீழ்ச்சிகள், பெருந்துன்பங்கள், பொருளாதாரக் கஷ்டங்கள் என்பன தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். அவற்றை மனப்பலத்தால் நீக்கித் தொடர்ந்து மனோதிடத்துடன் முயற்சிப்பவன் வெற்றி பெறுவான். தன் நம்பிக்கையும், முயற்சியும் அவற்றை வெற்றி கொள்ள வைக்கும்.

70. நன்மை என்பது பரிசு. தீமை என்பது நெருப்பு. தீமை செய்பவர்கள் தமக்குத் தாமே தீமை செய்கிறார்கள் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. கர்மயோக விதியின் படி ஒருவன் எதைச் செய்கிறானோ, அது அவனுக்காகச் செய்யப்படுகிறது. அதனால் செய்பவனக்கு பயன் கொடுக்கும் வரை அது ஓயாது. பயன் கிடைக்க நாளாகலாம். ஆனால் கிடைத்தே தீரும் என்பது கடவுளின் வாக்கு.

71. நான் நற்செயல்கள் எவையும் செய்யவில்லை. செய்விக்கப்படடேன் என்று நினைப்பவன் தான் சிறந்தவன். இது சகல விதமான ஒழுக்கங்களையும் பேண வைக்கும். இந்த நடை முறை மனிதனை மகாத்மாவாக உருவாக்கும். இவ்வாறு வாழ்பவனுக்கு இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை. விருப்பும் இல்லை, வெறுப்புத் இல்லை. அவனுக்கு அரசனும், ஆண்டியும் சமமானவராவர்.

72. பற்றில்லாதவர்களின் இருதயங்கள் எப்போதும் சுத்தமாகவே இருக்கும். அதனால் அவர்களின் இதயங்களில் கடவுள் மிக்க மகிழ்வுடன் குடியிருப்பார்.

73. தீயவர்களுக்குப் புத்தி கூறப்போனால் கூறுபவனுக்குத் தான் துன்பம் ஏற்படும். அதனால் அவனை அப்படியே விட்டு விட வேண்டும். காலம் அவனைத் திருத்தும்.

74. நண்பர்கள் விரோதியானால் மௌனமாக இருங்கள். எதிரிகள் துன்பங்களைச் செய்தாலும் திருப்பி அவர்களுக்குத் துன்பம் செய்யாது வாழுங்கள். இவர்களுக்காகப் பரிதாபப்படுங்கள்.

கடவுளுக்கு யாவும் தெரியும். ஒரு காலத்தில் அவர்கள் உண்மையை உணர்வார்கள்.

75. எல்லோரையும் திருப்திப்படுத்தி வாழ வேண்டும் என்று நினைக்காதீர்கள். ஒருவர் நண்பராக இருப்பார். இன்னொருவர் பகைவராக இருப்பார். வேறொருவர் புறம் சொல்பவராக இருப்பார். இப்படி ஒவ்வொருவரும் பல முகங்களுடன் வாழ்வார்கள். அதனால் யாரையும் திருப்திப்படுத்த முடியாது. நீங்கள் ஒழுக்கமாக வாழுங்கள். அதுவே போதும்.

76. கடவுள் படைத்த உயிர்கள் எல்லாவற்றிற்கும் இறைவன் குறைகளை வைத்ததில்லை. மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், புழுக்கள் யாவும் தன் நிறைவுடனும், மகிழ்வுடனும் காணப்படுகின்றன. அவற்றிற்குப் பற்றுக்கள் இல்லை. மனிதனுக்குப் பற்றுக்கள் பலவும் இருப்பதனால் எல்லாம் இருந்த போதும் இன்னும் சேர்க்க ஆசைப்படுகிறான். அதனால் தான் காரணங்களின்றித் துன்பப்படுகிறான்.

77. முயற்சி செய்யுங்கள். விரும்பியவை கிடைக்கும். ஆராய்ந்து பாருங்கள் உலகின் இயல்பு புரியும். ஆசைப்படாதிருங்கள் துன்பங்கள் உங்களை நெருங்காது.

78. பெயர், புகழுக்காகத் தருமம் செய்யாதீர்கள். உங்கள் வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது என்று முதுமொழியுண்டு. கைகளுக்கு அறிவிக்கும் ஆற்றல் இல்லை. அது பொருளை இனங்காணும். அப்படி இருக்க வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும். வலது பக்கம் கணவனுக்குரியது. இடது பக்கம் மனைவிக்குரியது. ஒரு தருமவான் வலது கையால் தானம் செய்வது பற்றித் தனது மனைவிக்குக் கூடச் சொல்லக் கூடாது என்றே அர்த்தம் கொள்ளப்படுகிறது. மனைவிக்குச் சொன்னால், மனைவி வாய் தடுமாறிக்கூட யாருக்காவது சொல்லிவிடுவாள். எனவே தருமம் செய்வது இரகசியமாக இருக்க வேண்டும். அதை யார் அறிந்து உனக்குப் பயன் தரவேண்டுமோ அவர் அறிந்து பயன் தருவார். கடவுள் அறியாதது எதுவுமில்லை.

79. இயற்கையின் ஒவ்வொரு செயற்பாடும் மனிதனுக்கு உலகைப் புரிந்து கொள்வதற்கான அறிவைக் கொடுக்கிறது. விவேகமுள்ள மனிதர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள்.

80. மனிதன் தனது முயற்சியால் மட்டும் முன்னேற்றமடைவதில்லை. உறவினர்கள், நண்பர்கள், சமூகத்தவர்களின் உதவியினாலும் தான் முன்னேற்றமடைகிறான். எல்லாவற்றுக்கும் கடவுளின் அருள் வேண்டும்.

81. ஒவ்வொருவரும் ஒழுக்கம் மிக்க தவவாழ்வ வாழ வேண்டும். ஒருவன் நன்மைகளை அதிகம் பெற வேண்டுமானால்

ஒழுக்கம் மிக்க தவவாழ்வு வாழ வேண்டும். அத்தவ வாழ்வு முன்னேற்றத்தைத் தருவதோடு மோட்சத்தையும் தரும்.

82. துன்பப்படுபவர்கள் கவலை கொள்ளாது முயற்சித்தால் துன்பங்கள் நீங்கி இன்ப வாழ்வு கிடைக்கும். கவலை மனதையும் உடலையும் பாதிப்புறச் செய்வதால் கவலைப்படுபவர்களால் முயற்சி செய்ய முடியாது. அவர்கள் கவலையை மறக்க ஒழுக்கமற்ற செயல்களையே செய்வார்கள்.

83. எதிலும் திருப்தியடைபவர்களே பாக்கியவான்கள். ஏனெனில் திருப்தியை இலேசில் அடையமுடியாது. அது மிகவும் பெறுமதியானது. அதனால் தான் அதை உடையவர்களைப் பாக்கியவான்கள் என்று பெரியவர்கள் கூறுகின்றனர்.

84. ஒருவன் அன்றன்று செய்ய வேண்டியவற்றை அன்றன்றே செய்து முடித்தல் வேண்டும். ஏனெனில் மறுநாள் முதல் நாள்போல இராது.

85. உண்ண முடியாத புளிப்புச் சுவையான மரங்களில் நல்ல இன மரக்கிளையை ஒட்டினால் நல்ல பழங்களைப் பெறலாம். மனிதர்களும் நல்ல குணங்களைத் தம்முள்ச் செலுத்தி கெட்டவர்கள் நல்லவர்களாகவும், நல்லவர்கள் மேலானவர்களாகவும் மாறுதல் வேண்டும்.

86. தேவைக்கு அதிகமாகப் பொருள் தேட விரும்புபவன் எத்தகைய கடினமான செயலையும் எதிர் கொள்ளத் தயங்கமாட்டான். அவன் தனது முயற்சியைப் போல ஒழுக்கத்தையும் பேணினானேயானால் தனது இலட்சியத்தைப் பூர்த்தி செய்வான்.

87. தீமை செய்பவர்களை மன்னிப்பதே உங்களுக்கு நீங்கள் செய்யும் பேருதவியாகும். தீமை செய்பவன் ஆற்றங்கரையில் நிற்கும் மரத்தைப் போன்றவன். ஆற்றங்கரையில் நிற்கும் மரத்திற்கு எப்போதும் குறைவின்றி நீர் கிடைக்கும் அது போல அந்த நீரே அதை அழித்தும் விடும். தீமை செய்பவர்கள் அத் தீமையாலேயே அழிவார்கள்.

88. வாழ்க்கையில் இன்பமும், இளமையும் நிலைத்து நிற்பன அல்ல. நாளுக்கு நாள் அவை மாறுபாடடையும் தன்மை கொண்டவை.

89. வேண்டுதலின்றிச் செய்யும் தானதர்மங்களும், பயன் கருதாது செய்யும் செயல்களும் மனிதர்களை மகான்களாக மாற்றும். இதுவே உங்களுக்கு நீங்கள் செய்து கொள்ளும் நன்மையாகும். இந் நன்மை சகல செல்வங்ககளையும் நாடிவரச் செய்யும்.

90. வீரன் புறங்காட்ட மாட்டான். அகந்தையுள்ளவன் நல்லவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டான். அன்புள்ளவன் யாரையும்

மனம் நோகச் செய்யமாட்டன். ஞானி அதிகம் பேசமாட்டான். சினம் கொண்டவன் பயனை ஆராயமாட்டான். இது அவர்களின் இயல்பு.

91. எல்லாவகையான கஷ்டங்களும் ஏற்படுவது அறியாமையினாலேயே. தான் செய்யும் செயல்களை பற்றித் தீர ஆலோசிக்காதவன் அறியாமை மிக்கவன். அறியாமை தான் மனிதனின் முதல் விரோதி.

92. மனதில் குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்படும் போது எதையும் சிந்திக்காது அமைதியாக இருப்பது தான் நல்லது. மனம் அமைதியடைந்த பின் சிந்தித்தால் குழப்பங்கள் நீங்கும்.

93. இளவயதினருக்கு நல்ல சிந்தனைகளை மட்டும் சொல்லிக் கொடுங்கள். இந்த வயதில் மனதில் பதியும் விடயங்கள் இறக்கும் வரை நிலைத்திருக்கும்.

94. நீ செய்யும் ஒவ்வொரு தீமையும் உன்னைத் தாக்கும். உனது பலவீனம் ஒவ்வொன்றும் உனது வாழ்வை நாசமாக்கும். அதனால் தீமைகள் செய்யாது இரு. பலமுள்ளவனாக உன்னை மாற்று.

95. நீ ஒரு போதும் மற்றவர்கள் மீது குற்றம் காணாதே. பிறரின் குற்றங்களைப் பற்றி நீ சிந்திக்க சிந்திக்க உனது மனதில் அச்சிந்தனைகள் பதிய ஆரம்பிக்கும். அது உனது நல்ல இயல்புகளைக் கெடுத்து உன்னை குற்றவாளியாக்கி விடும்.

96. தீயவர்களாக இருந்தாலும் அவர்களிடத்தில் ஒரு சில நற்குணங்களாவது இருக்கும். அப்படியிருந்தால் அவற்றை நீ கவனத்தில் எடு. அதற்கு மறியாதை கொடு. உனது அந்தச் செயல் தீயவர்களின் மனதில் நல்ல செயலாகப் பதியும். கால ஓட்டத்தில் உனது நற்செயல்கள் பலவற்றை அவர்கள் பின்பற்றுவார்கள்.

97. கல்வியறிவில்லாதவர்களையும், சுயநலம் கொண்டவர்களையும் விலக்கி வைத்தல் வேண்டும். இதனால் அவர்கள் மனம் மாறலாம். விலக்காவிட்டால் பழியும், பாவமும், பகையும், பொருள் அழிவும், அச்சமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும்.

98. பிறர் தன்னை மதிக்கும் போது பெருமைப்படாமல் இருத்தலும், தனது பகைவர்கள் தன்னைத் தூற்றும் போது அதனைப் பொருட்படுத்தாமல் இருப்பதும், செயல்களைப் பயன் கருதாது செய்வதும் மேல்மக்களது குணங்களாகும்.

99. கல்வியாலளர்களைக் குதற்கப் பேச்சால் வெல்ல நினைப்பதும், தனக்குரியன அல்லாதவற்றைத் தீயவழிகளில்

அடைய முற்படுவதும், கல்வியாளர்களை ஆராயாது குற்றம் கூறுதலும் என்றும் துன்பங்களையே தரும்.

100. பெண்களையும், பொருள்களையும், உணவு வகைகளையும் காப்பாற்றும் முறைகளை அறிந்து காப்பாற்றாவிட்டால் துன்பங்கள் தான் உண்டாகும்.

101. அறிவில்லாதவர்களுடன் நட்புக் கொள்வதும், உண்மையான பொருளை உணராது கதைப்பதும், தேவையில்லாது சினப்பதும், தீயவற்றை விரும்புவதும் அறிவற்றவர்களின் செயல்களாகும்.

102. யாராக இருந்தாலும் பேசும் முன் நன்கு ஆலோசித்துவிட்டுப் பேசுங்கள். பிறரைப் புகழும் போது கவனமாக இருங்கள். மற்றவர்களின் குறைகளைப் பேசும் போது உங்களிடம் அக்குறைகள் இல்லையா என்று முடிவெடுத்த பின் பேசுங்கள். இவ்வாறு நடந்தால் உங்களைத் தவிர வேறு யாரிடமும் குறைகளைக் காண முடியாது.

103. ஒரு பொருள் மிகவும் அற்பமானதாக இருந்தாலும், அது தேவையைப் பொறுத்து மதிப்புள்ளதாக மாறும். அதனால் அதை இகழக் கூடாது. மதிப்பு என்பது பெறுமதியல்ல. தேவையே மதிப்பைத் தீர்மானிக்கிறது.

104. எதைப் பற்றியென்றாலும் அறிந்து கொள்ள வேண்டுமானால் அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்களை அணுக வேண்டும். அவரால் தான் அதைப் பற்றி ஏற்படும் சந்தேகங்களுக்கு முழுமையான விளக்கம் தர முடியும்.

105. இவ்வுலகம் துன்பங்கள் நிறைந்தது. ஒரு துன்பத்திலிருந்து மிகவும் சிரமப்பட்டு விடுபடும் முன் பத்துத் துன்பங்கள் சூழ்ந்து கொள்ளும். இதை அறிந்தவர்களால் தான் மகிழ்வுடன் வாழ முடியும்.

106. விதி எவரினதும் கட்டளைப்படி நடப்பதில்லை. நாம் ஒன்றை நினைக்க நடப்பது வேறொன்றாகிறது. இதைப் புரிந்து கொண்டு வாழ்பவர்களால் தான் வாழ்க்கையை வளம்படுத்த முடிகிறது.

107. கடவுள் என்பவர் காணமுடியாத பொருளல்ல. எமது உள்ளதிலுள்ள பொருள். காற்றில் மணத்தையும், தீயில் வெப்பத்தையும், நீரில் குளிர்மையையும் போல மனத்துள் உள்மனமாக இருக்கிறார். அவரைக் கண்டு பிடிப்பது அவரவர் திறமையைப் பொறுத்தது. மனிதனில் உள்ள அறியாமையை நீக்கினால் ஞானம் வெளிப்படும். ஞானத்தின் வெளிப்பாடு கடவுளைக் காட்டும்.

108. அளவுக்கதிகமான தூக்கம், தேவையில்லாத பயம், அளவுக்கு மீறிய சோம்பல், எதையும் அதட்டை செய்தல்,

இளவயதில் கல்லாத கல்வி ஆகியன மனிதனின் முன்னேற்றத்திற்கான எதிரிகளாகும்.

109. பெரியவர்களுடன் தொடர்பு வைத்திருந்திருந்தாலும், அறிந்தவர்களிடம் ஆலோசனை கேட்டாலும் தனது நிலைமையை அறிந்தே தொழில் செய்தல் வேண்டும்.

110. எப்பொழுதும் மகிழ்வுடன் இருக்க கற்றுக் கொள்ளுங்கள். முயற்சியும் திருப்தியும் மனதை நிரப்பினால் என்றும் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். முயற்சியுடனும், திருப்தியுடனும் இருந்தால் மகிழ்ச்சியை பறி கொடுக்க வேண்டிய நிலை ஒரு போதும் ஏற்படாது.

111. என்னால் முடியும் என்று உறுதியாக நம்புங்கள். அந்த மனோபாவம் ஏற்பட்டால் எந்தச் செயலிலும் வெற்றி காணலாம். என்னால் முடியாது என்ற தன்னம்பிக்கையில்லாத சந்தேகம் மனதைப் பற்றிப் பிடித்தால் அதை அகற்ற யாராலும் முடியாது.

112. தினமும் இறைவனை வழிபடும் போது எனக்கு மனவலிமையைத் தா என்று கேளுங்கள். தினமும் அதைக் கேட்பதால் உங்கள் உடலும் உள்ளமும் வலுப்பெறும். அதனால் எதையும் செய்யக்கூடிய மனப்பலம் உண்டாகும். திரும்பத் திரும்ப கேட்பதன் மூலம் உங்களை நீங்களே தயார்படுத்துபவராவீர்கள்.

113. ஒரு செயலில் அறிவுக்குள்ள முக்கியத்துவத்தை விட ஊக்கமான உழைப்பே முக்கியம் பெறுகிறது. இதனால் தான் அறிவை நம்பிய பலர் தோல்வியடைந்துள்ளனர்.

114. நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் செயலை முடிப்பேன் என்ற வைராக்கியத்துடனும் செய்யுங்கள். அப்படிச் செய்தால் கடினமான செயல்களையும் இலகுவாகச் செய்யும் தன்மை உங்களிடம் உருவாகும்.

115. துன்பங்கள் வரும் போது மனமுருகி இறைவனை வணங்குவது போல மகிழ்ச்சியான வேளைகளிலும் மனமுருகி வணங்குங்கள். அப்படி வணங்குவதன் மூலம் இறைவனை இலகுவாக வசப்படுத்தலாம்.

116. அறியாமை என்பது சாத்தானின் சாபம். அறிவென்பது இறைவனின் வரம்.

117. அறிவானவர்கள் தமக்கு வரும் துன்பங்களைத் துன்பங்கள் என்று நினைத்துக் கலங்குவதில்லை. அத்துன்பங்களை எவ்வாறு நீக்கலாம் என்று தமது அறிவால் உணர்ந்து நீக்குவார்கள். அது பாமர மக்களுக்கு ஒரு பாடமாக அமையும்.

118. உடல் வலிமையுள்ளவனால் தான் செயற்கரிய செயல்களைச் செய்ய முடியும் என்று நினைப்பது பொய். மனவலிமை தான் செயல்களில் வெற்றிகளைத் தேடித் தருகிறது.

119. வாழ்க்கையில் பணம் தேடுவது தான் இலட்சியம் என்றால், அதை அடைவது சுலபம். ஆனால் மற்றவர்களை விட நாம் பணக்காரனாக இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. ஏன் என்றால் ஊரில் பெரும் தொழிலதிபராக இருந்த ஒருவர் திடீரென இறந்துவிட்டார். அவரது மரண வீட்டிற்கு வந்தவர்களில் அனேகமானோர் அவருக்குக் கடன் கொடுத்தவர்கள்.

120. பகலில் தெரியாத நட்சத்திரங்கள் இரவில் தெரிவது போல, யாருக்கும் தெரியாதென நாம் செய்யும் செயல்களும் ஒரு நாள் வெளியே தெரிய வரும்.

121. வாழ்க்கைச் சக்கரம் இரண்டு தன்மையானது. ஒன்று சேவை, மற்றது அன்பு. சேவை பிறரை மகிழ்ச்சிப்படுத்துகிறது, அன்பு உள்ளங்களை நெருக்கமாக்குகிறது.

122. உனது பிரச்சினைகளை மற்றவர்களால் தீர்க்க முடியாது. ஏன் என்றால் தமது பிரச்சினைகளைத் தீர்க்கவே அவர்களால் முடிவதில்லை.

123. தன்னைப் பற்றி உயர்வாக எண்ணுபவனும், தன்னைப் பற்றி தாழ்வாக எண்ணுபவனும் முன்னேற முடியாது.

124. அறிவுள்ளவனாக இருந்தாலும் அவையின் ஒழுங்கிற்கேற்ப நடக்காதவரை அவை மதிக்காது. அது போல உயர்ந்த கருத்துக்களைச் சொல்வதாக இருந்தாலும் மக்களுக்குப் புரியும் படி சொல்லாவிட்டால் அந்த கருத்தால் எந்த நன்மையும் ஏற்பட மாட்டாது. மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்கள் யாவும் எளிமையானதாகவே உள்ளன. மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்களும் எளிமையானவர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர்.

125. அழகைப் பற்றி முடிவெடுப்பதானால் கண்களால் எடுக்காதீர்கள். மனதால் எடுங்கள். வேறு விடயங்களைப் பற்றி முடிவெடுப்பதானால் மூளையால் எடுக்காதீர்கள். அறிவால் எடுங்கள். கண்களும் மூளையும் சேர்ந்து பகுத்தறிவால் எடுக்கப்படும் முடிவுகளே சரியானதாக இருக்கும்.

126. கடன் வாங்குவோர் பல்வேறு வகைப்பட்ட துன்பங்களையும் சேர்த்து வாங்குவதால் அவர்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியுண்டாவதில்லை.

127. ஒருவர் தன்னைத் தான் மதிப்பிடும் போது, தனது குறைகளை விட்டு விட்டு நிறைகளை மட்டுமே கணக்கில் கொள்கிறார். ஆனால் மற்றவர்கள் அவரது நிறைகளை விட்டு விட்டுக் குறைகளையே மதிப்பீடு செய்கிறார்கள்.

128. அடுத்தவர்களைக் குறை காண்பது என்பது எல்லோருக்கும் சுலபமான செயல். குறைகளிலும் நிறைவைக் காண்பது பெரியோரது இயல்பான செயல்.

129. நாயை ஒரு கேவலமான பிறவி என்று நினைத்து கேவலமானவர்களை ‘‘நாயே’’ என்று திட்டுகிறோம். ஆனால் நாய் தான் உலகில் உயர்ந்த பிறவி என்பது அறிந்தவர்களுக்கு மட்டுமே புரியும். நன்றி, விசுவாசம், கள்ளமின்மை, பாதுகாப்பு, தியாக மனப்பான்மை என்பன நாயில் இருக்கும் அளவிற்கு எந்த மனிதனிடமும் இல்லை.

130. மன்னிப்பு என்பது தவறுகளுக்கான அங்கீகாரம். தவறு செய்து விட்டு மன்னிப்புக் கோருவது அதற்கான பரிகாரம் அல்ல. அது பின் பழக்கமாகிவிடும்.

131. தொண்டு செய்பவன் எந்தவிதமான சுயநல நோக்கும் இல்லாமலும், பணம், புகழ் கருதாமலும் தொண்டு செய்தல் வேண்டும். தொண்டு செய்யுமுன் இருந்த பொருளாதார நிலையையும் தொண்டு செய்யும் போது இருக்கும் பொருளாதார நிலையையும், தொண்டை முடித்த பின் இருக்கும் பொருளாதார நிலையும் சமனாக இருந்தால் தான் தொண்டின் சிறப்பு உணரப்படும். இதே நேரம் புகழ் அதிகரித்திருக்கும். கௌரவம் கூடியிருக்கும். இது தான் தொண்டு.

132. எதிலும் பற்றில்லாமலும், தன்னலமற்ற மனப்பாங்குடனும் வாழ்வது தான் ஆன்மீக வாழ்வு. அப்படியான வாழ்வு வாழ்பவன் எதற்கும் அஞ்சமாட்டான். வளைந்து கொடுக்கவும் மாட்டான். மற்றவர்களுக்கு முன்மாதியாக வாழ்வான். இவனைக் கடவுளுக்கும் பிடிக்கும்.

133. தேவையில்லாத விடயங்களைப் பற்றிச் சிந்திப்பதிலும், செயலாற்றுவதிலும் தான் மனிதனது பெரும் சக்தி விரயமாகிறது. இதனால் கவலையும், துன்பங்களையும் தான் நாம் பெறுகிறோம். இது தொடர் கதையாக மனித வர்க்கத்தைப் பீடித்துள்ள தீராத நோயாகும்.

134. ஒருவன் தூய்மையாக இருந்தால் அது பலருக்குச் செய்யும் உதவிகளை விட மேலானது. தூய்மையான உள்ளத்தில் இரக்கம், பரிவு, தானம், தர்மம் யாவும் குடியிருந்து மற்றவர்களுக்கு உதவி செய்யும். இப்படியானவர்கள் அழைக்காமலே கடவுள் வந்து இவர்களுக்கு அருள்வார். தினமும் கோவிலுக்குச் சென்று விக்கிரங்களை

வணங்குவோர் வழிபாட்டின் ஆரம்ப நிலையில் தான் என்றும் இருப்பார்கள்.

## நான் எழுதிய சமயம் சார்ந்த நூல்களில் உள்ளவை

135. மதத்தின் நோக்கம் மனிதனை முத்தியடைய செய்வதல்ல. வாழ்க்கைக்கான வழிவகைகளைக் காட்டுவது, சேவை செய்யத் தூண்டுவது, கடமையைச் சரியாகச் செய்ய வைப்பது, மனதில் அமைதியைக் கொடுப்பது, தீயவற்றை விலக்கச் செய்வது, பற்றற்று வாழச் செய்வது. இதனால் பாமரன் பக்திமானாவான். பக்திமான் சேவகனாவான். இப்படிச் செய்வதனால் முத்தி செய்பவனைத் தேடி வரும்.

136. நீ உன்னைப் போல மற்றவர்களை நேசிக்கும் போது தான் நீ சமய வாழ்வு வாழத் தயாராகிறாய். துன்பங்கள் தானாக வந்து சேர்வதில்லை. மாறாக ஒவ்வொரு வரும் மனதாலும் செயலாலுமே துன்பத்தைத் தமக்குள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இது விலக வேண்டுமானால் பற்றுக்கள் அற்று மற்றவர்களை நேசிக்க வேண்டும்.

137. வழிபாடுகளின் முறைமையில் சமய வாழ்வு அமைவதில்லை. பூசைகளிலும் இல்லை. மனஒடுக்கத்தில் தான் சமய வாழ்வு தங்கியுள்ளது. வழிபாடுகளின் பின் செய்யக்கூடாதவற்றையே பலரும் செய்கின்றனர். மனம் ஒடுங்கியவன் ஒரு போதும் சமயத்திற்கு முரணான வழிகளில் நடப்பதில்லை.

138. எல்லையில்லாத சக்திகள் பலவும் மனிதனின் உள்ளத்தில் மறைந்திருக்கின்றன. சமய வாழ்வு அதை வெளிப்படுத்துகிறது. அதன் வெளிப்பாடகள் தான் மகான்களின் உபதேசங்கள், கண்டுபிடிப்புக்கள்.

139. கடவுள் என்பவர் மனிதனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவற்றையே கொடுப்பார். உணவின்றி வாடுபவர்களுக்கு உணவும், நீரின்றி வாடும் பயிர்களுக்கு நீரும் வழங்குவதே அவரின் திருவருள். பசியால் உணவு கேட்பவனுக்குத் திருநீறு கொடுக்க கடவுள் தேவையில்லை. கோவில்களில் எவ்வேளைகளிலும் திருநீறு கிடைக்கும். பலர் திருநீற்றைக் காட்டி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

140. சமய சாதனங்களான உருத்திராக்கம், காவியுடை, திருநீறு, குங்குமம், தீர்த்தம் போன்றவை சமயத்தையோ, ஆத்ம ஞானத்தையோ வளர்ப்பதில்லை. மன ஒடுக்கம் தான் அவற்றை வளர்க்கிறது.

141. சமய சாதனங்களுக்கு அப்பால் மனிதன் செல்ல வேண்டும். திருநீறு அணிவதன் மூலம் சகலதும் கிடைக்குமானால் அவன் தொழில் எதுவும் செய்யாமல் வாழமுடியும். சமய

சாதனங்கள் யாவும் இறைவனின் இருப்பை உறுதிப்படுத்துபவை. மனம் சுத்தமாக இருந்து இறைவனைப் பிராத்தித்தல் வேண்டும். சுத்தமில்லாத செம்பில் கறக்கப்படும் பசுவின் தூய்மையான பால் கெட்டுவிடுவதைப் போல, சுத்தமில்லாதமனதைச் சமயச் சாதனங்கள் சுத்தப்படுத்த மாட்டாது.

142. ஆசைப்படும் போது எண்ணம் சிந்தனை யாவும் ஆசையை நிறைவேற்றுபவையாகவே இருக்கும். அதனால் மனம் நல்லதை எண்ணாது. ஆகையால் ஆசைப்படாமல் இரு. உனக்குரியவை எவையும் உன்னை விட்டுப் போகாது. உனக்கில்லாத எவையும் உன்னை வந்தடையாது. எது எது எப்பெப்ப வருமோ அது அப்பப்ப வரும். இது உலகின் நியதி. கடவுளின் வரம்.

143. வாழ்க்கையில் பெரும் சாதனைகளை நிகழ்த்தியவர்களின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் விடாமுயற்சியும், தான் நினைத்தவற்றை நிறைவேற்றுவதற்கான மனவுறுதியும், பிடிவாதமான போக்கும் கொண்டவர்களாக இருப்பதைக் காண்கிறோம். சாதனைகளைச் செய்ய விரும்புவோர் இம் மூன்றையும் பின்பற்றல் வேண்டும்.

144. உண்மையுடனும், தூய்மையுடனும், சுயநலமின்றியும் செய்யப்படும் எச் செயலையும் கெடுக்க யாராலும் முடியாது. ஏனெனில் இம் மூன்று சக்திகளையும் கொண்ட ஒரே சக்தி தான் கடவுள்.

145. வாழத் தெரிந்தவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நல்ல முறையில் வாழ்கிறார்கள். வாழத் தெரியாதவர்கள் அதிஷ்டமில்லை என்றும் விதியின் படி தான் யாவும் நடக்கிறது என்றும் கூறி சோம்பேறிகளாக வாழ்கிறார்கள். முன்னேற்றம் என்பது சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்துவதில் தான் தங்கியுள்ளது.

146. தவறானவற்றைச் சரியென்று நினைப்பவர்கள் பெரும் துன்பத்துக்குள்ளாகின்றனர். இருந்தும் தவறைச் சரியென்று வாழ்நாள் முழுவதும் நம்பித் தம் வாழ்வைத் தொலைக்கின்றனர். புத்திசாலிகள் மாறிக் கொண்டிருக்கும் காலத்திற்கேற்பத் தம் வாழ்வை மாற்றிக் கொள்வதால் அவர்கள் பெரும் துன்பத்துக்குள்ளாவதில்லை.

147. உங்களது வார்த்தைகளைப் பிறர் கேட்காத பட்சத்தில் நீங்கள் பேசாமல் இருப்பது தான் நன்மைகளைத் தரும்.

148. தான் செய்த தவறுகளைத் தவறென்று உணர்ந்து அதற்காக மன்னிப்புக் கேட்டு அதைத் திருத்திக் கொள்பவன் தான் அறிஞன்.

149. எந்தச் செயலையும் தைரியமாக எதிர்கொள்பவனுக்குத் தான் விரும்பியவை கிடைக்கும்.

150. சில மனிதர்கள் மேலானவர்களாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் வகிக்கும் பதவியாகும். அவர்கள் ஓய்வு பெற்ற பின் மக்கள் அவர்களை மேலானவராகக் கருதினால் உண்மையில் அவர்கள் மேலானவர்களே. அவர்கள் பதவியில் இருக்கும் போது நல்லவற்றைச் செய்து நல்லபடி வாழ்ந்தவர்கள் என்று அப்போது தான் நம்ப முடியும்.

151. தோல்விகளில் இருந்து ஒவ்வொரு வரும் பல பாடங்களைக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால் தோல்விக்கு முக்கிய காரணம் மேற்கொள்ளும் செயல்களில் போதிய முயற்சியின்மையேயாகும்.

152. சிறு சிறு குற்றங்களைச் செய்வோர் பெருங்குற்றங்களைச் செய்யத் தயங்கமாட்டார்கள். அதனால் சிறு குற்றங்களைச் செய்யாதிருந்தால் பெருங்குற்றங்களைப் பற்றிய நினைவு வராது.

153. பழிச் சொற்களைக் கண்டு அஞ்சத்தேவையில்லை. குற்றச் செயல்களைச் செய்யத்தான் தான் அஞ்ச வேண்டும்.

154. கடவுள் மூளையைக் கொடுத்திருக்கிறார். தேவையான பொருட்களையும் படைத்துள்ளார். ஒவ்வொருவரும் அவற்றைக் கொண்டு தமக்குத் தேவையானவற்றைத் தேடிக் கொள்ளல் வேண்டும்.

155. கேட்டவற்றைச் சிந்தித்துக் கொண்டும், நேசம் கிடைக்கும் போதெல்லாம் கற்றுக் கொண்டும் வாழ்வதே உண்மையான வாழ்க்கையாகும். எதையும் சிந்திக்காமலும் புதியவற்றைக் கற்காமலும் வாழ்பவன் வாழமுடியாது துன்பப்படுவான்.

156. நல்லவை கிடைப்பது அதிஷ்டமாக இருக்கலாம். ஆனால் அவற்றைத் தக்கவைக்க அதிஷ்டம் உதவாது. திறமை தான் உதவும்.

157. அறிவை வளர்ப்பது தனது வளர்ச்சிக்காக மட்டுமல்ல. பிறருக்கு அதை அளிக்க மேலும் மேலும் வளரும். மறைத்து வைத்திருந்தால் அது மறைபொருளாகித் தனக்கும் உதவாது போகும்.

158. அறிவாளி ஒரு செயலைச் செய்வதனால், அச்செயலுக்குத் தேவையற்ற செயல்கள் எவையெவை என அறிந்து அவற்றைத் தவிர்த்த பின்பே செய்ய வேண்டியவற்றைச் செய்வான்.

159. தைரியத்துடன் ஒரு செயலைச் செய்ய முடிவு செய்தவனை எதிர்ப்புக்கள் சோர்வடையச் செய்யாது. மாறாகப் பலத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும்.

160. பிரச்சினைகள் வந்தால் தைரியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பது விவேகமும், தைரியமும் தான். தீர்க்க முடியாதென்ற நிலை ஏற்படும் போது அதைக் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு தொடர்ந்து தைரியத்துடன் செயற்படுங்கள். அது முடிவுக்கு வரும்.

161. எந்தச் செயலைச் செய்யும் போதும் அதற்குரிய விதிமுறைகளின் படி செய்யுங்கள். எக்காரணங் கொண்டும் விதி முறைகளை மாற்றாதீர்கள். உலகம் விதி முறைப்படி தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. விதி முறைகளும் நேர்மையான சிந்தனையும் ஒழுக்கமான வாழ்வும் வெற்றிக் கனியைப் பெற்றுத் தரும்.

162. பிறர் தனக்குச் செய்யும் தீமைகளை வெறுத்து ஒதுக்கும் ஒருவர், தானும் அப்படியான தீமைகளையே பிறருக்குச் செய்கிறார்கள். தீமை செய்வதை விரும்பாதவர்கள் தீமை செய்பவர்களை வெறுத்தொதுக்காது விலகிச் சென்று விடுவார்கள். இது பெரியவர்களால் மட்டுமே செய்யக் கூடிய செயல்.

163. நாம் இடைவிடாமல் நல்லவற்றை எந்நேரமும் நினைத்துக் கொண்டிருந்தால் தான் புலன்கள், புத்தி, ஒழுக்கம் என்பன மாறாதிருக்கும். இதை விட்டு விட்டு ஒழுக்க மற்ற செயல்களை மனம் நினைத்தால் ஐம்புலன்களும் அதை நிறைவேற்றவே விரும்பும்.

164. நல்லவையோ, கெட்டவையோ இல்லை. வேறு எதுவோ ஒரு போதும் எம்மைத் தேடி வராது. நாம் தான் முயன்று அவற்றைத் தேடிக் கொள்ள வேண்டும்.

165. அனுபவத்தைப் பெற வேண்டுமானால் செயலில் இறங்க வேண்டும். செயலின் முடிவில் அனுபவம் ஏற்படும். இது புத்தகங்களைப் படிப்பதாலோ, பிறரிடம் ஆலோசனைகளைக் கேட்பதாலோ வராது.

166. உடலுக்கு உறக்கமும் ஓய்வும் தேவைப்படுவது போல, மனதிற்கும் ஓய்வு தேவை. அதற்காக மௌனமாக இருந்து சில நிமிடங்கள் தியானம் செய்தல் வேண்டும். மனதிற்குக் கொடுக்கும் ஓய்வு நல்லவற்றைச் சிந்திக்க வைக்கும். தவறுகளைச் சுட்டிக்காட்டும்.

167. வாழ்க்கையில் துன்பங்கள் வருமளவிற்கு இன்பங்கள் வருவதில்லை. எவ்வளவு தான் கவனமாகச் செயற்பட்டாலும் தவறு நேர்ந்து விடுகிறது. இவற்றை தைரியத்துடன் ஏற்பவன் தான் வெற்றியடைகிறான்.

168. தைரியமின்மையும் பயமும் தான் செயல்களின் தோல்விக்குக் காரணமாகின்றன. அதை விதியென்று எண்ணாது தன் நம்பிக்கையுடனும், தைரியத்துடனும்

செயலில் இறங்குபவர்கள். வெற்றியடைகிறார்கள். இது வராது எமக்குக் கற்பித்த பாடமாகும்.

169. முன்னேற்றம் என்பது முயற்சி. விடாமுயற்சியும், தைரியமும் தன் நம்பிக்கையுமே வெற்றியின் படிகள்.

170. கவலையால் சோர்வு. சோர்வால் சோம்பல். சோம்பலால் முயற்சியின்மை. அதனால் கவலைப்படுவதை விடுத்து உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள். சோர்வு, சோம்பல் யாவும் விலகி விடும். பின் முயற்சி தானாக வந்து சேரும்.

171. கவலைப்படுவதால் மனம், மூளை, உடல் யாவும் தளர்வடையும். ஒரு நாள்க் கவலை பின் வாரமாகிப் பின் மாதமாகி வாழ் நாளையே கெடுத்து விடும். கவலைக்கு மருந்து நடந்த துன்ப நிகழ்வுகளை எண்ணாதிருந்தலே.

172. உன்னைப் பிறர் குறை கூறினால் அது பற்றி விசாரித்துக் கவலைப்படாதே. சண்டைக்குப் போகாதே. அதைக் கேளாதவன் போல இரு. குறைகள் யாவும் காலகதியில் மறையும். விசாரனைக்குச் சென்றால் வழக்குப் போல நீளும்.

173. கடந்த காலத்தைப் பற்றி நினைத்துக் கவலைப்படக் கூடாது. நிகழ்காலத்தைக் கற்பனை செய்து மகிழவோ, துன்பப்படவோ கூடாது. காலம் எம்கையில் இல்லை. அது யாரின் கையில் உள்ளதோ அவரின் செயற்பாட்டின் படி தான் இயங்கும். காலத்தை இயக்குபவர் கடவுள்.

174. ஒவ்வொருவரினதும் மனம் தான் அவருக்கு இன்பத்தையும் துன்பத்தையும் வாரி வழங்குகிறது.

175. நாக்குத் தான் மனிதனை இயக்குகிறது. நல்லதைப் பேசினால் என்றும் நன்மையுண்டாகும். தீயதைப் பேசினால் என்றும் துன்பமுண்டாகும். சுவையாகவுள்ள உணவுகளை விரும்பி உண்டால் நோயாளியாக்கும். எனவே நாவின் போக்கிற்கேற்ப மனிதன் நடக்காது, நாவை மனத்தைக் கட்டுப்படுத்துவது போலக்கட்டுப்படுத்த வேண்டும். உண்மையான கட்டுப்பாடு நாவுக்கே. ஒழுக்கமாக வாழ்பவர்களும் உணவில் ஆசையேற்பட்டால் நோயாளிகளாவர்.

176. கலையும் அதிஷ்டமுள்ளவர்களையே வாழவைக்கும். இலக்கியங்களை ஆக்குவோர் பணக்காரனாக இருந்தால் அவை பலராலும் ஏற்கப்படும். ஏழைகளாக இருந்தால் சிறந்த இலக்கியமானாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. காலங்கடந்த பின் ஏற்கப்பட்டு உலகம் உள்ளவரை அது போற்றப்படும். அதனால் சிறந்த இலக்கிய கர்த்தா உலகம் உள்ளவரை வாழ்வான். ஆனால் உயிருள்ளவரை மகிழமாட்டான்.

177. வாழ்க்கையில் துன்பங்கள் வரும் போது அவற்றை ஒதுக்கி வைப்பதோ, ஒதுங்கிச் செல்வதோ கூடாது. அப்படிச் செல்வதன் மூலம் துன்பங்கள் அதிகரிக்கும். துன்பத்தைத் தீர்க்கும் தைரியத்தை உண்டாக்கி அவற்றை அழித்தல் வேண்டும்.

178. இளமையின் விருப்பங்கள் யாவும் முதுமையில் வெறுப்பாக மாறும். எல்லாம் அழியும் என்ற நிலை ஏற்பட்டால் உலக வாழ்வின் தன்மை புரியும்.

179. இயலாமை காரணமாகவே ஒருவன் தன்னை உயர்வாக எண்ணுகிறான். இதை உணர்ந்தவர்கள் இயலாமை உடையவர்களின் செயற்பாடுகளை மதிப்பதில்லை.

180. பணம் புத்திசாலிகளுக்கு உற்ற தோழனாக இருக்கிறது. முட்டாள்களுக்கு வாழ்வைக் கெடுத்தழிக்கும் எதிரியாக இருக்கிறது.

181. சிக்கனமும் சேமிப்பும் தான் தனவந்தர்களை உருவாக்குகிறது.

182. எத்தனை முறை துலக்கினாலும் தேவையேற்படும் போதெல்லாம் பித்தளையைத் துலக்க வேண்டும். அது போலத் தீயவர்களுக்கு எத்தனை முறை சொன்னாலும் நிகழ்வின் போது சொல்லாவிட்டால் நிகழ்வு குழம்பி விடும்.

183. நிம்மதி, அன்பு, காருண்ணியம், இரக்கம், காதல் இவையெல்லாம் ஒவ்வொருவரினதும் மனதில் தான் உள்ளது. அதை விடுத்து கோவில், ஆச்சிரமம் என்று பல்வேறு இடங்களுக்கும் சென்றலைவதால் எந்தப் பயனும் வராது. உனது மனதில் பக்தியை உருவாக்கி விட்டுக் கோவிலுக்குப் போ. மனதில் இல்லாத எதுவும் நீ எங்கு சென்றாலும் வராது.

184. உயிர்கள் யாவும் இளமையில் அழகாய் உள்ளன. ஆனால் பெரும்பான்மையோரின் மனதில் இளமை இல்லை. மனதில் இளமை உள்ளவர்கள் முதுமையிலும் இளமையாக இருப்பார்கள். பேச்சில், நடையுடை பாவனையில் மற்றவர்களை வரவேற்பதில் என்று பலவிடயங்களில்.

185. சிந்திக்கக்கூடியவர்களுக்கும், முயற்சியுள்ளவர்களுக்கும், தன்னைப் போலப் பிற உயிர்களை நேசிப்பவர்களுக்கும் ஒரு போதும் தோல்வியேற்படுவதில்லை. துன்பங்களும் துன்புறுத்துவதில்லை.

186. தினமும் உலகம் மாற்றமடைந்து கொண்டே இருக்கிறது. அந்தவகையில் ஒருவனது வாழ்வும் தினமும் மாறிக் கொண்டே இருக்கும். மனத்துணிவோடு செயற்படுபவரின் வாழ்வு கணத்திற்குக் கணம் மாற்றமடையும்.

187. காலை நிலை தான் கடலில் அலைகளை உருவாக்குகிறது. சிறிய அலைகள் பேரலைகளாக மாறும், பேரலை சிறிய அலைகளாக மாறும். வாழ்க்கை என்ற கடலில் காலம் ஏழையை உயர்த்தும். பணக்காரனைத் தாழ்த்தும். எதுவும் நடக்கலாம்.

188. எப்படி வாழ்ந்தால் எப்படியான வாழ்வு கிடைக்குமென்று நமக்கு முன்பு வாழ்ந்தவர்களின் வாழ்க்கையைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

189. தீமைகள் ஆரம்பத்தில் சுவையான உணவுகளைப் போலத் தித்திக்கும். பின் அதுவே நஞ்சாக மாறி உயிரைக் கொல்லும்.

190. ஒருவரின் செயல்களை மற்றவர்கள் மதித்துப் புகழ வேண்டுமே தவிரத் தனது செயல்களைப் பற்றித் தானே புகழ்பவர்கள் சமூகத்தவரால் இகழப்படுவார்கள்.

191. தன்நம்பிக்கை, விடாமுயற்சி என்பன இருந்தாலும் தொழிலாளர்களை அன்பாக நடத்தத் தவறுபவர்கள் தோல்வி அடைவார்கள்.

192. பொருள் இல்லாதவனுக்குப் பொருள் இல்லை என்ற கவலை. பொருள் உள்ளவனுக்கு அதைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கவலை.

193. சீர்திருத்தம் என்பது தன்னில் தான் முதலில் தொடக்கப்பட வேண்டியது. அதன் பின்பு தான் தன் குடும்பம், தன் சமூகம் என்று விரிவடைய வேண்டியது.

194. ஒரு பொருளை அடையும் வரை அப்பொருளே உலகில் சிறந்த பொருளாகத் தென்படும். அப்பொருளை அடைந்த பின் அப்பொருள் அற்பமான பொருளாகி விடும்.

195. நற்குணங்களைப் பேணுபவர்களில் பலர் தேவையேற்படும் போது அவற்றை விற்று விடுகின்றனர்.

196. வாழ்க்கை என்பது களியாட்ட மேடை. அம்மேடையில் துன்பமான நிகழ்வுகளும் அரங்கேறும், இன்பமான நிகழ்வுகளும் அரங்கேறும், புதுமையான நிகழ்வுகளும் அரங்கேறும், விரும்பக் கூடிய விரும்பத்தகாத நிகழ்வுகளும் அரங்கேறும். புத்திசாலிகள் நல்லவற்றையே அரங்கேற்றித் தாமும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விப்பர்.

197. செயற்படும் போது கடினமாகச் செயற்படு. பேசும் போது குறைவாகப் பேசு. அதனால் காரியங்கள் கைகூடும். அன்பான பலர் உன்னோடு சேர்வார்கள்.

198. நல்ல செயல்களைச் செய்து விட்டு என்னால் எதுவும் செய்யப்படவில்லை என்று நினைப்பது ஞானம். அந்த ஞானம் கைவரப் பெற்றால் இந்த உலகில் பெரியவன் நீ. உன்னால் சாதிக்க முடியாதவை என்று எவையும் இல்லை.

199. எல்லாவற்றிற்கும் ஆதாரம் நம்பிக்கை. ஆனால் நம்பிக்கை தான் ஆதாரமல்ல.

200. மரணத்தை நினைத்துப் பயப்படுபவன் என்றோ மரணமடைந்தவனாவான். அவனால் எதையும் தீர்மானிக்க முடியாது.

201. விருப்பப் படி வாழ்க்கையை அமைக்க முடியாது. அமைந்த வாழ்க்கையை விரும்பித் தனக்கேற்றவாறு அமைப்பவன் இறக்கும் வரையும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும்.

202. நீரை இறைக்க இறைக்கக் கிணற்றில் நீர் பெருகும். அது போல அன்பைக் கொடுக்கக் கொடுக்க அன்பு பொங்கிப் பெருகும்.

203. யாரும் யாருக்கும் கற்றுக் கொடுக்கவோ, அறிவுரை சொல்லவோ முடியாது. தான் செய்தது தவறு என்று தெரிந்தவன் தவறு செய்யான். உயிர்கள் மீது அன்புள்ளவன் மாமிசம் உண்ணான். இவற்றை உணர வேண்டுமே தவிரக் கற்பதால் பயனில்லை.

204. செல்வத்தைச் சேகரிப்பதே வாழ்க்கையின் இலட்சியம் என்று எண்ணுவது தவறு. வாழ்க்கையை வளப்படுத்துவதே பணத் தேடுதலின் நோக்கமாகும்.

205. ஒரு கிராமத்தில் உள்ள தீய செயல்களைச் செய்வோர் ஒன்று கூடுவதையும் ஒற்றுமையாகச் செயலாற்றுவதையும் பார்க்கும் நல்லவர்கள் எல்லோரும் ஒன்று கூடித் தீயவற்றைத் தடுக்க வேண்டும்.

206. கல்வியின் நோக்கம் கற்றவர்கள் மேலும் மேலும் கற்று மேதாவிகள் ஆவதல்ல. பின் தங்கிய மக்களின் அறிவை மேம்படுத்தி அவர்களைச் சுயமாகச் சிந்திக்க வைப்பதே .

207. போதனைகள், ஆலோசனைகள், புத்திமதிகள் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கக் கூடியதாகவும், அறிவை மேம்படுத்தக் கூடியதாகவும், உயிர்களிடத்து அன்பையும் இரக்கத்தையும் வளர்க்கக் கூடியனவாகவும், தன்நம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்க்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

208. கற்க வேண்டிய யாவற்றையும் கல்வியோடு சேர்த்துக் கற்பித்தால் அக்கற்றல் முறை மாணவனைச் சிறந்த மனிதனாக உருவாக்கும்.

209. தொழில்கள் யாவும் சமத்துவமுடையவை. வருமானத்தில் தான் ஏற்றத் தாழ்வுகள் உண்டு. மூட்டை சுமப்பதில் வெட்கப்படாத ஒருவன் முதலாளியாவதற்கான ஆரம்ப நடவடிக்கையை மேற்கொள்கிறான்.

210. உனக்குப் பெருமையும், புகழும் வேண்டுமானால் உன்னோடு பழகுபவர்களோடு அன்பாகப் பழகு. அதன் மூலம் நீ தலைவனாவாய்.

211. ஒரு கல்லைக் கல்லாகவும் காணலாம், கடவுளாகவும் காணலாம். காண்பது அவரது மனநிலையைப் பொறுத்தது.

212. ஒருவன் தனது அறிவைப் பெருக்கும் போது தான் முன்பு வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வான்.

213. காலதாமதம் முன்னேற்றத்தின் படிகளை மறைத்துவிடும்.

214. வாழ்க்கையில் மரணம் ஒரு சாதாரண நிகழ்வு. அது நடப்பது இழப்பல்ல இயற்கை. ஆனால் உயிரோடு உள்ள பலரிடம் மனிதாபிமானம் என்றோ இறந்து விட்டது. அது மனித குலத்தின் பாரிய இழப்பாகும்.

215. ஒரு நல்ல மனிதன் தனது சுற்றத்தவர்கள் எப்போதும் தன்னைச் சார்ந்திருக்க வேண்டும் என்று நினைக்க மாட்டான். நல்ல மனிதர்களும் யாரையும் சார்ந்திருக்க விரும்ப மாட்டார்கள். ஒருவனைச் சார்ந்து இருப்பவன் முன்னேற மாட்டான் என்று நல்லவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்கள் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை அறிந்து கூறுவார்கள்.

216. பறவைகளும், விலங்குகளும் ஒரு குறிப்பிட்ட வயதின் பின் தொழில் செய்தே உண்ண வேண்டும் என்ற நிலையைத் தாய்மை உருவாக்கிக் கொடுக்கும். இதை மனிதர்கள் பின்பற்ற வேண்டும்.

217. நீ எதிர்பார்க்கும் தகுதியுடன் பலர் இருப்பதில்லை. அதனால் நீ எதிர்பார்க்கும் தகுதிகளைப் பொருத்தமானவர்களிடையே உருவாக்கு. அதனால் பலர் உனக்குக் கிடைப்பார்கள்.

218. பணம் இருப்பவர்களில் பலரைத் தெரிவதில்லை. ஆனால் எல்லோருக்கும் பணத்தைக் கொடுப்பவரைத் தெரியும். அதனால் தான் இரப்பவர்கள் அவர்களிடம் செல்கிறார்கள்.

219. அருகில் இருக்கும் போது கோபுரங்கள் உயரமாகத் தெரிவதில்லை. அது போல நல்லவர்கள் வாழும் போது உயர்ந்தவர்களாகக் கருதப்படுவதில்லை.

220. செய்யக்கூடாதவற்றைச் செய்வதும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விடுவதும் தான் துன்பங்களுக்குக் காரணம்.

221. ஒருவன் துன்பங்கள் இல்லாது வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. அவன் வாழும் போது வாழ்க்கைக்குரிய பண்புகளுடன் வாழ்ந்தான் என்பது தான் பெருமை.

222. சில நேரங்களில் தோல்வி துன்பங்களைத் தந்தாலும் பின் அதுவே வெற்றியைத் தரும் என்று நினைப்பவனுக்குச் செய்யும் செயல்கள் யாவும் வெற்றியைக் கொடுக்கும்.

223. முட்டாள், முன்கோபி, விதண்டா வாதம் செய்பவன் முன் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம்.

224. எதையும் எதிர்பாராது செயலில் ஈடுபட்டால் வரும் பயன் சிறிதானாலும் அது பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கும். பெரும் பயனை எதிர்பார்த்துச் செய்யும் செயல் இலாபத்தைத் தந்தாலும் அது மகிழ்ச்சியைத் தராது.

225. நீ நினைப்பது நடக்கவில்லை என்றால், உன்னிலும் பார்க்கச் சக்தி கூடியவன் இருக்கிறான் என்று முடிவு செய். அவன் தான் இறைவன். நீ நினைப்பது நடைபெற்றால் கடவுள் உன்னை ஆசீர்வதிக்கிறார் என்று நினைத்துக் கொள்.

226. பழிக்குப் பழி வாங்காதே. பழி வாங்குபவர்களை மன்னித்து விடு. அதனால் உனக்கு நன்மை உண்டாகும். பழி வாங்குபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

227. நீ செய்யும் நன்மைகளும், தீமைகளும் காலப்போக்கில் உன்னை வந்தடையும். வாழ்வு நீண்டது. இளமையில் செய்தது இளமையில் தான் வந்தடையுமென்றில்லை. உனக்குத் தேவையான நேரம் வந்தடைந்து பயனைத் தரும்.

228. மலரைப் பார், செடிகளைப் பார். அதிலிருக்கும் முட்களைப் பார்க்காதே. முட்களைப் பார்த்தாயானால் அருமையான ரோஜாக்களை இழந்து விடுவாய்.

229. அன்பு என்ற சொல்லுக்குள் அடங்காத தர்மங்கள் எவையும் இல்லை. அன்பு தான் சிவம் என்கிறது சைவசித்தாந்தம்.

230. மதம் ஒருவனை வாழவைக்காது. மத ஒழுக்கங்களே வாழவைக்கும். மதங்கள் பலவானாலும் அவை

வலியுறுத்துவது அன்பை. அன்பு மயமானவன் இறைவன் என்று கூறாத மதம் எது?

231. கடவுள் ஒருவர் தான் எல்லோருடனும் வேறுபாடில்லாது கலந்திருப்பவர். தீமை செய்தாலும் நன்மை செய்பவர். நாம் அன்பு கொள்ளாவிட்டாலும் எம்மில் அன்பு கொள்பவர் எல்லோரையும் சமமாக நினைப்பவர். ஆனால் நாம் தான் வேறுபடுகிறோம்.

232. தீமை செய்பவர்களையும் மதிப்பவர்கள் இருக்கிறார்கள். அதனால் தான் தீமை செய்வோர் துணிவுடன் தீமைகளைச் செய்கின்றனர். தீமை செய்வோர்க்கு வழக்காட நியாயவாதிகள் இல்லாதிருந்தால் தீயவர்கள் சிறையில் தான் இருப்பார்கள்.

233. அறிவாளிகள் எப்போதும் தம் அறிவைப் பிற அறிவுள்ளவர்களுடன் ஒப்பு நோக்கிக் குறை காண்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளனர். இது மனிதன் பிறந்த நாளில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

234. மௌனமாக இருத்தல் என்பது தவம் செய்வதைப் போன்றது. மௌனமாக இருப்பவனது மனம், மெய், மொழி ஆகிய மூன்றும் சமநிலைப்பட்டிருக்கும்.

235. கடவுள் மிகவும் நல்லவர். அவர் உயிர்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் போதியளவு படைத்துள்ளார். அவரவர் தமது திறமைக்கேற்ப அவற்றை எடுத்துக் கொள்கின்றனர்.

236. மனஅடக்கமின்றிச் செய்யும் செயல்கள் நிறைவேற்றப்படுவதில்லை. அதே போல் மனஅடக்கமின்றிச் செய்யும் பூசைகளும், ஆராதனைகளும் பலனளிப்பதில்லை.

237. ஆன்மா அழிவதில்லை. அது மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்துத் துன்பப்படுகிறது என்று சைவசமயம் கூறிய போதும் சைவசமயத்தவர்கள் உணர்வதாக இல்லை. அவர்கள் பூமியில் பதவிகள் பெறுவோர் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுப்பதைப் போல் இறைவனுக்குப் பூசைகள் செய்தும், பெறுமதியான ஆபரணங்களை வழங்கி விட்டும் பாவங்கள் செய்கிறார்கள். இப்படிச் செய்யக் கூடாதென்று சமயம் கூறிய போதும் அவர்கள் அதைக் கேளாது மூட நம்பிக்கைகளில் ஈடுபட்டுத் தமது பொருளையும் நேரத்தையும் வீணாக்குகிறார்கள்.

238. ஒவ்வொருவரும் தத் தமது அறிவின் தரத்தை உணர்ந்து கொள்வார்களேயானால் தனது தரத்தை அறிந்த அறிவாளியாவார். அதை விடுத்துத் தன்னைப் பாண்டித்தியம் மிக்கவனாக எண்ணினால் அவனைப் போன்ற முட்டாள் யாருமில்லை.

239. உலகைப் புரிந்து கொண்டவர்கள் எதன் மீதும் அவாப்படுவதில்லை. இன்பம் வந்த போது கூடிக் குதூகலிப்பதும் இல்லை, துன்பம் வந்த போது அழுது புலம்புவதும் இல்லை. அழுது புலம்புவதால் துன்பம் தொலையாதென்றும், கூடிக்குலாவுவதனால் இன்பம் நிலைக்கும் என்றும் அவர்கள் நம்புவதில்லை.

240. அறியாமையும் தன்னடக்கமும் உள்ள நூறு பேரின் துணையை விட அறிவும் தன்நலம் கருதாமையும் உடைய ஒருவரது துணை ஆயிரம் மடங்கு மேலானது.

241. அதிகம் படித்து விட்டு ஒழுக்கமில்லாமல் வாழ்ந்து கொண்டு மக்களுக்கு உபதேசம் செய்பவனை விட கற்காத ஒரு நல்லவன் ஒழுக்கமாக வாழ்ந்து கொண்டு மற்றவர்களுடன் அன்பாகப் பேசுவது சிறப்பானது.

242. அறிவில்லாதவனுக்கு மற்றவர்களால் ஏற்படும் துன்பங்களை விடத் தன்னால் ஏற்படும் துன்பங்களே அதிகமானவை.

243. சிறிய தவறைப் பெரியோர் செய்தால் அது பெரிதாகிறது. பெரிய தவறைச் சிறியோர் செய்தால் அது பெறுமதியை இழக்கிறது.

244. அறிவைக் கொண்டு உயர் பதவியடைந்தவனை யாராலும் வீழ்த்த முடியாது. அவன் படிப் படியாக முன்னேறி உச்சநிலையை அடைவான்.

245. அதிகாரிகள் நேர்மையின்றி நடந்தால் அவர்கள் பலவீனப்பட்டு விட்டார்கள் என்று முடிவு கட்டலாம். பலவீனப்பட்ட அதிகாரிகளை ஒரு சிறு துரும்பு கூடத் தைரியமாகத் தாக்கும்.

246. செயலைச் செய்யும் முன் பலவீனப்படக் கூடாது. பலவீனப்பட்டால் செயலைச் செய்ய முடியாத நிலை ஏற்படும். பின் அச் செயலை முற்றாகக் கை விட வேண்டிய நிலை உருவாகும்.

247. வாழ்வில் துன்பங்கள் வரும் போது கலங்கக்கூடாது. பயம் தான் துன்பத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்தவர்கள் தம் ஆன்மாவின் சக்தியைக் கொண்டு தோல்வியை வெற்றியாக்கி விடுவார்கள்.

248. மனத் தைரியம் இல்லாதவர்களுடன் சேர்ந்து உழைப்பவர்கள் கால கதியில் மனத் தைரியத்தை இழந்து விடுவார்.

249. வாழ்க்கை என்பது ஒரு நூலகம். அதில் உள்ள முழுவதையும் யாராலும் வாசித்து முடிக்க முடியாது. தாம் கற்ற சில நூல்களை வைத்துக் கொண்டு உலக நடைமுறைகளை விமர்சிப்பது கேலிக்குரியது.

250. கடவுள், உயிர்கள் அனைத்தும் இன்பமாக வாழ வேண்டும் என்று விருப்போடு தான் உலகில் பல்வேறு விதமான பொருட்களையும், உயிர்களையும் படைத்தார். தன்னால் படைக்கப்பட்ட உயிர்களுக்குத் துன்பம் செய்யாது அவற்றில் இருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பெற வேண்டும் என்பதே கடவுளினது விருப்பமாகும்.

251. கடவுள் நல்லவர்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பார். தீயவர்களை அவர் வெறுக்காது அவர்களைத் திருத்துவதற்கு வழி அமைத்துக் கொடுப்பார். உயிர்கள் அனைத்தும் இன்பமாக வாழ வேண்டும் என்பதே அவரது நோக்கம்.

252. கடவுளை அன்போடு வணங்கினால், அவர் வணங்குபவர்களின் உள்ளத்தில் மகிழ்வுடன் வீற்றிருந்து அவர்களுக்கு வழிகாட்டியாகச் செயற்படுவார். கடவுளை வணங்குவோர் எல்லா உயிர்களிலும் அன்பாக இருப்பதால் அவர்களை எல்லா உயிர்களும் விரும்பும்.

253. கடவுளை இப்படித்தான் வணங்க வேண்டுமென்றில்லை. எமது சௌகரியத்திற்காகக் கடவுள் எங்கும், எல்லா உயிர்கள் மீதும் வீற்றிருக்கிறார். பொதுவாக சைவக் கடவுள்கள் மரங்களின் கீழ் வீற்றிருக்கிறார்கள். கடவுளை

நினைத்து மரங்களை வணங்கலாம். கோவிலுக்கும் சென்று வணங்கலாம், வீட்டிலும் வணங்கலாம், குறித்த நேரம் என்றில்லாது நேரங் கிடைக்கும் வேளைகளில் வணங்கலாம்.

254. மனிதன் பற்றுக்களை உடையவன். கடவுள் பற்றுக்கள் அற்றவர். இது தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம். பற்றுள்ளவன் பாகு பாடு காட்டுவான். ஆசைப்படுவான். ஆனால் கடவுளுக்குப் பற்றில்லாததால் அவர் எவ்வுயிர் மீதும் பாகுபாடு காட்டுவதில்லை. மனிதர்கள் பற்றுக்களை அறுத்தால் தெய்வமாகலாம். இதற்குப் பல உதாரண புரிசர்களை மேற்கோள் காட்டலாம்.

255. பற்றுக்கள் தெய்வீகத் தன்மையை நீக்கி மனதை இருளடையச் செய்யும். அதனால் இருண்ட இருதயத்தில் இரக்கம், கருணை, பக்தி, சாந்தம், தர்மசிந்தனைகள் இராது. இதனால் அவன் சுயநலவாதியாக மாறி மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருப்பான்.

256. சமயங்கள் மனிதனை ஒழுக்கமுள்ளவனாக மாற்றி, அவனை மேன்மையடையச் செய்யவே விரும்புகின்றன. மனிதனிடமுள்ள அசுர இயல்புகளை நீக்கித் தெய்வீக இயல்பை உண்டாக்குவது பக்தி. பக்தி என்பது அளவு கடந்த அன்பு. இறைவன் மீது கொள்ளும் அன்பு காலப்போக்கில் எல்லா உயிர்கள் மீதும் அன்பு கொள்ள வைக்கிறது.

257. சுயநலம் கடவுளை மறைக்கும். இன்பத்தை அழிக்கும். உண்மையைப் பொய்யாக்கும். பஞ்சமாபாதகங்கள் அனைத்தையும் துணிவுடன் செய்ய வைக்கும். ஒருவன் சுயநலம் அற்றவனாக வாழத் தொடங்கினால், அது தான் கடவுளை அடைவதற்கான முதற்படியாகும்.

258. சுயநலம் இல்லாதவன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தாலும் எளியவனாகவே வாழ்வான். அவனது மனதில் என்றும் நீங்காது இறைவன் மகிழ்வுடன் வீற்றிருப்பான். தன்நலம் என்று சொல்லப்படுகின்ற சுயநலம் தான் உலகில் உள்ள பாவங்கள் அனைத்திற்கும் மூல காரணியாகும்.

259. உயிர்கள் எல்லாவற்றிலும் இறைவன் வீற்றிருக்கிறார். ஆனால் சுத்தமான மனமுள்ளவனிக் மனதில் மகிழ்வுடன் வீற்றிருக்கிறார். அதனால் அவனும் மகிழ்வுடன் இருக்கிறான். இறைவனும் மகிழ்வுடன் இருந்து அவனை இயக்குகிறார்.

260. ஒவ்வொருவரிலும் உள்ள தூய்மையான இறைபக்தி தான் கடவுள் என்றொருவர் இருக்கிறார் என்பதை உணர வைக்கிறது. இந்த உணர்வு தான் ஒழுக்கத்தை உண்டு பண்ணி சமய வாழ்வு வாழ உதவுகிறது. சமய வாழ்வு வாழ்பவனால் சாதிக்க இயலாத காரியங்கள் எவையும் இல்லை. அவனால் சாதிக்க முடியவில்லையானால் அவன் முழுமையான சமய வாழ்வு வாழவில்லை என்றே கூற வேண்டும்.

261. ஒவ்வொரு உயிரும் இறைவனின் ஆலயமாகும். அவற்றுள் கடவுள் வீற்றிருக்கிறார் என்று உணர்ந்து கொண்டால் பாவங்கள் உண்டாக வாய்ப்பே இராது. ஏனைய உயிர்களைக் கண்டால் அவற்றின் மீது அன்பும் இரக்கமும் உண்டாக வேண்டுமே தவிர அவற்றின் தசையின் மீது ஆசை கொள்பவன் கடவுளை நம்பாதவனாவான்.

262. நல்லவர்கள் காரணங்கள் இருப்பினும் சினங் கொள்ள மாட்டார்கள். தப்பித் தவறிச் சினங் கொண்டு ஒருவனை ஏசிவிட்டால் அதன் பின் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அதற்காக வருந்துவார்கள். ஆனால் தீயவர்கள் காரணமின்றி நல்லவர்களைத் திட்டுவார்கள் பின் அதை பெரும் பெருமையாக எடுத்து பெருமைப்படுவார்கள்.

263. ஏராளமான பத்திரிகைகளும், நூல்களும் காலப்போக்கில் அழிந்து போனதற்குக் காரணம் அவை பிரசுரமான காலத்தில் மக்களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெறவில்லை என்பதே. காலங் கடந்தும் ஓர் இலக்கியம் வாழ வேண்டுமானால் அது மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றால் அவை நல்ல கருத்துக்களைக் கூறவேண்டும். முன்னைய அரசர் பலரால் அங்கீகரிக்கப்பட்டுப் பரிசளிக்கப்பட்ட நூல்கள் பல தற்போது காணாமற் போனமைக்குக் காரணம் அது தான். இது பலவற்றிற்கும் பொருந்தும். ஞானிகள், பேச்சாளர்கள், புலவர்கள், மக்கள் இப்படிச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

264. கடவுள் எல்லோரையும் ஒரே மாதிரியாகவே படைத்தார். குடும்பமும் சூழ்நிலையும் தான் வேறுபாடுகளை உருவாக்குகிறது. என்னால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என்று நினைப்பவன் சாதனையாளனாகிறான். என்னால் முடியாது என்று நினைப்பவன் துன்பப்படுகிறான். காலையில் எழுந்து வானத்தைப் பாருங்கள். எத்தனையாயிரம் பறவைகள் உணவு தேடிச் செல்கின்றன.

அவைக்கு உணவில்லாவிட்டால் நாளுக்கு நாள் அவை பெருகிச் செல்லுமா?

265. இப்போது எதற்கும் அவசரப்படுகிறார்கள். சில தினங்களுக்கு முன்பு நான் கோவிலுக்குச் சென்றிருந்தேன். காலையில் வேலைக்குச் செல்வோர் வாகனங்களில் வருவார்கள். வாகனத்தில் இருந்தபடியே வணங்குவார்கள். சிலர் வாகனத்தால் இறங்கி வணங்குவார்கள். அன்று மோட்டார் சைக்கிலில் கெல்மட்டுடன் வந்த ஒருவர் அவசரமாக மோட்டார் சைக்கிளால் இறங்கி, கெல்மட்டுக்குக் குட்டிவிட்டுத் தோப்புக் கரணம் போட்டார். கடவுளை வணங்கல், உணவு உண்ணல், மனைவியோடு கூடிக் கதைத்தல். உறவாடல் போன்ற விடயங்களில் அவசரப்படவே கூடாது. அவசரப்பட்டால் வாழ்க்கை சீரழிந்து விடும். நிதானமாக, பொறுமையாக, மகிழ்ச்சியாக செய்ய வேண்டிய வேலைகள் அவை.

266. நினைவுகளும், செயல்களும் ஒரு போதும் அழிவதில்லை. அவை அவ்வப் போது நினைவில் வந்து மகிழ்விக்கும், துன்பத்தைத் தரும். தீயசெயல்கள் என்றும் மனதில் இருக்கும். அவை உரிய காலம் வரும் போது பயனைக் கொடுக்கும். யாருக்கும் தெரியாது செய்த செயல்களும் பயன் கொடுப்பவனாகிய கடவுளின் நினைவில் எப்போதும் இருக்கும்.

267. ஒரு பெண்ணைப் பார்ப்பது இன்பம். அவளோடு கதைப்பது இன்பம், அவளை நினைப்பது இன்பம், அவளுடன் கூடி வாழ்வது பேரின்பம். ஒருவன் பேரின்பமடைய வேண்டுமானால் அவனது மனைவி வாழ்நாள் முழுவதும் மகிழ்வுடன் இருக்க வேண்டும். மகிழ்வென்பது திருப்தியால் உண்டாவது.

268. உலகில் வாழும் எல்லாப் பெண்களும் அழகிகள் தான். அழகில்லாதவர்கள் யாரும் இல்லை. ஏனென்றால் ஒரு பெண்ணைத் திருமணம் செய்பவன் அவளை விட அழகி வேறு யாரும் இல்லை என்ற நினைவுடனே அவளைத் திருமணம் செய்கிறான்.

269. நம்பிக்கையின்மை ஏமாற்றத்தை உண்டாக்கும். ஏமாற்றம் கவலைகளை உண்டாக்கும். கவலைகள் துன்பத்தை உண்டாக்கும். துன்பங்கள் நோய்களை உண்டாக்கும். அதனால் நூறு முறை தோற்றாலும் வெல்வேன் என்ற நம்பிக்கையுடன் போராடு வெல்வாய்.

270. உலக சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் மிகமிகத் துன்பப்பட்ட பலர் மனத்திடத்துடன் போராடியமையால் பெரும் சாதனைகளை நிகழ்த்தியதைக் காண்கிறோம். அதனால் துன்பப்படும் வேளைகளில் வாழ்க்கையில் போராடி வென்றவர்களை நினைத்துப் பார்த்து மனதைத் தேற்றுங்கள்.